

விலை சதம் 20

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2000, பங்குனி 13 உ புதன் 26-3-69 முஹர்ரம் 7 புத்தகம் 23 இதழ் 22




## மலையகத்தில் தமிழர்
## வீடுகளில் புகுந்து
## சிங்களக் காடையர்

# அட்டகாசம்

மலையகத்தமிழர்களின் வீடுகளில் புகுந்து சிங்களக் காடையர்கள் பயமுறுத்தலில் ஈடுபட்டுவருவதாக அறியப்படுகிறது. முக்கியமாக அண்ணு, எம். ஜி. ஆர். போன்ருேரின் படங்கள் தொங்கவிடப் பட்டிருக்கும் வீடுகளுக்குள் சிங்களக் காடையர்கள் புகுந்து, அப்படங்களை அகற்றிவிடுமாறு அட்டகாசம் செய்கிருர்களாம். அப்படங்களை அகற்ருவிட்டால் ''பாரதூரமான'' சம்பவங்கள் நடைபெறுமென்றும் அப்பாவித் தமிழர்கள் எச்சரிக்கை செய்யப்படுவதாகவும் மலையகச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

இப்படிப்பட்ட சம்பவங்கள் மஸ்கெலியா, தலவாக்கொல்லை, அட்டன் போன்ற இடங்களில் கடந்த இரு வாரங்களில் நடைபெற்றதாக அறியப்படுகிறது.

இதே வேளையில், சிங்கள இனவெறி தமிழர்களுக்கு எதிராக நாடு முழுவதும் முழு வேகத்துடன் இப்போது திருப்பப்பட்டு வருகிறது. எம். ஜி. ஆர். நடித்த தமிழ்ப் படங்கள் திரையிடப்பட்ட தியேட்டர்கள் சிலவற்றில் சிங்களக் காடையர்கள் தம் கை வரிசையை காட்டியுள்ளனர் என்றும் தெரிகிறது.

தமிழ்ப் படங்களுக்கும், எம். ஜி. ஆருக்கும் எதிரான துவேஷப் பிரசாரங்களின் பின்னணியில் தீவிர சிங்கள வெறியர்கள் நிற்கிருர்கள். தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்படும் துவேஷ பிரசாரத்தின் வேகம், மீண்டும் ஒரு வகுப்புக் கலவரத்தை எந்த நேரத்திலும் ஏற்படுத்தலாமென்று பொதுவாக அஞ்சப்படுகிறது.

கடந்தவாரம் அகில இலங்கை பௌத்த குரு மக்களின் மூன்று நிக்காயாக்களைச் சேர்ந்த மகாசங்க சபாவின் பௌத்த பிக்குகள் பிரதமரைச் சந்தித்து ஒரு மகஜரை சமர்ப்பித்துள்ளனர். அம் மகஜரின் பிரதிகள் ஏனைய அமைச்சர்களுக்கும், சிங்கள பா. உ.க்களுக்கும் வழங்கப் பட்டுள்ளன. அம்மகஜரில் பின்வரும் கோரிக்கைகள் இடம் பெற்றுள்ளன:-

- ★ வெளிநாட்டுடன் தொடர்புள்ள இ. தி. மு. கழகங்களைச் சட்டவிரோதக் கட்சிகளெனக் கணித்து உடன் தடை செய்ய வேண்டும்.
- ★ இன உணர்ச்சியைத் தூண்டும் தமிழ்ப்படங்கள் அனைத்தையும் தடை செய்ய வேண்டும்.
- ★ சிலதமிழ் எம். பீக்களின் ஒத்துழைப்புடனும் அனுகூலத்துடனும் கள்ளக் குடியேற்ற வாசிகள் இலங்கைக்கு வருவதை தடைசெய்ய பூர்வாங்க நடவடிக்கைகளை யெடுக்க வேண்டும்.
- ★ பொத்துவில், திரியாய, வில்கம, லாகுகல, திகவாபி சேருவாவில ஆகிய பௌத்த புனித பிரதேசங்களைச் சுற்றியுள்ள சுமார் இரண்டாயிரம் ஏக்கர் காணிகளிலும் சிங்கள பௌத்தர்களைக் குடியேற்ற வேண்டும்.
- ★ சனங்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளிலி

(9-ம் பக்கம் பார்க்க)

## தமிழரசு மாநாடு வெற்றிக்கு மக்கள் காட்டும் ஆதரவு

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் அரசியல் வரலாற்றில் புதிய திருப்பத்தை ஏற்படுத்கவிருக்கும் இலங்கை தமிழரசுக் கட்சியின் 11வது தேசிய மாநாட்டின் ஏற்பாடுகள் பூர்த்தியடைந்து வருகின்றன. தமிழரசு மாநாட்டுத் திகதி நெருங்கி வர வர தமிழ் மக்களிடையே உற்சாகமும் விறுவிறுப்பும் ஏற்பட்டுள்ளது. தமிழரசு வாலிபர்கள் தமிழரசு அலுவலகத்தையே தங்கள் இருப்பிடமாக மாற்றிக்கொண்டு மாநாட்டு அலுவல்களைக் கவனித்து வருகின்றனர்.

மாநாட்டுக்கு வேண்டிய பொருளுதவி, நிதி உதவிகளை செய்வதில் தமிழ் மக்கள் தாமே போட்டி போட்டுக் கொண்டு முன்வந்திருப்பதாக தெரிகிறது.

கிளிநொச்சித் தொகுதி மக்கள் மாநாட்டு உணவுத் தேவைக்கென ஏறத்தாழ நூறுமூட்டை நெல் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

### விடுதலைப் போராட்ட நிகழ்ச்சிகள்

தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்ட நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும் புகைப்படக் காட்சியொன்றும் மாநாட்டில் இடம் பெறவிருக்கிறது. இதற்கான புகைப்படங்கள் யாவும் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன.

### இலக்கிய வளர்ச்சி

பத்திரிகை புத்தகக் கண்காட்சியும் மாநாட்டின் ஓரம்சமாக இடம் பெறவிருக்கின்றது. ஈழத்து இலக்கிய வளர்ச்சியை எடுத்துக்காட்டும் வகையில் இந்நாட்டு எழுத்தாளர்களால் வெளியிடப்பட்ட பல்வேறுவகையான இலக்கிய நூல்களும் பத்திரிகைகளும இக்கண்

(9-ம் பக்கம் பார்க்க)

## அண்ணு அஞ்சலி— ஜெயவீரா விசாரணை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ப் பகுதியில் நடைபெற்ற அண்ணு அஞ்சலி நிகழ்ச்சியையொட்டி நடந்ததாகக் கூறப்படும் முறைகேடுகள் பற்றி ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத் தலைவர் திரு. நெவில் ஜெயவீரா இப்பொழுது விசாரணை நடத்தி வருவதாக தெரிகிறது.

அஞ்சலி நிகழ்ச்சியில் பங்குபற்றியவர்கள் எந்த வகையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பதுபற்றிய விளக்கத்தை திரு. நெவில் ஜெயவீரா தமிழ்ப் பகுதியிடமிருந்து கோரியிருப்பதாகத் தெரிகிறது. ஏனைய தமிழ் பத்திரிகை ஆசிரியர்களின்றி, குறிப்பிட்ட ஆசிரியர் மட்டும் அண்ணு அஞ்சலியில் கலந்து கொள்வதற்கு எதற்காக பொறுக்கியெடுக்கப்பட்டார் என்றும் திரு. ஜெயவீரா கேட்டுள்ளதாக அறியப்படுகிறது.

கடந்த வார சுதந்திரனில், மக்கள் குரல் பகுதியில் வெளிவந்திருந்த ஓர் கடிதத்தில் ஒரு நேயர் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திடம் அண்ணு அஞ்சலி சம்பந்தமாக கேள்விக்களை தொடுத்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன் கதைச் சுருக்கம்

ரகு ஒரு மீனவ குடும்பத்தைச் சேர்ந்த அநாதை. தன் தாய் மாமனாகிய சின்னையாவின் உதவியால் கல்விகற்று அரசாங்க உத்தியோகமும் பெற்று விடுகிறான். அவர்கள் பக்கத்து பங்களாவிற் குடியிருப்பவர்தான் எஞ்சினியர் ஏகாம்பரம். உயர் குடும்பத்தைச் சேர்ந்ததாகப் பெருமை பேசும் அவருக்கு ஒரேயொரு மகள். பெயர் உமா. ரகுவும் உமாவும் சந்தித்த பின் காதலிக்கின்றனர். ஏகாம்பரம் இதை எப்படியோ அறிந்து ரகுவுக்குத் தடை விதிக்கிறார். தொழிலுக்குச் சென்ற தனது ஒன்றுவிட்ட அண்ணன்மார் இருவரையும் தேடிக் கடலுக்குச் சென்றவன் திடீர் என ஏற்பட்ட புயலில் சிக்கித் திருகோணமலையைச் சேர்ந்த மீனவர்கள் சிலரால் காப்பாற்றப்பட்டு திருகோணமலையை அடைகிறான்.

அங்கே சில நாட்கள் காலங்கழித்த பின் ஏற்பட்ட விரக்தி மனப்பான்மையால் தற்கொலை செய்துகொள்ள கடலுக்குச் செல்கிறான். ஆனால் அங்குதான் அவனுக்கு ஆச்சரியங் காத்திருக்கிறது. ஆமாம் அதே கடலுக்குத் தற்கொலை செய்து கொள்ள வரும் பவானி என்ற பெண்ணைக் காப்பாற்றி அவளைத் தன் தங்கையாக்கிக் கொள்கிறான் அவன். அவளோ விவாகம் செய்யாமலே தாய்மைப்பேற்றை அடையப்போகும் நிலையில் உள்ளவள். அதனால் இருவரும் கொழும்பு செல்கின்றனர்.

அங்கு சேரிவாழ் புனிதத்தின் புனிதமான அன்பில் ஒதுங்க நிழல் கிடைக்கிறது. ரகு தனது பெயரை ராமு என்று கூறிக்கொள்ளுகிறான். வேலைதேடித் திரியும் அவனுக்கு புனிதம் புதிய தொழில் ஒன்றை அறிமுகப்படுத்துகிறாள்.

சரி, இனி மேலே படியுங்கள்!

# எங்கே நீயோ நானும் அங்கே உன்னோடு

பா. பாலேஸ்வரி

நமது தொடர்கதை

அத்தியாயம்

(11)

திக்கற்றவர்களுக்குத் தெய்வந்துணையென்று கேள்விப்பட்டிருந்தான் ரகு. ஆனால் இவ்வளவு சீக்கிரத்தில் அந்தத்தெய்வம் தனக்கு உதவும் என்று அவன் நினைத்துப் பார்க்கவேயில்லை. புனிதத்துக்கு எந்தவகையில் நன்றி கூறுவது என்று தெரியாமல் அவன் தயங்கி நின்றபோது 'பரவாயில்லைத் தம்பி களவு எடுக்காமல் பொய் சொல்லாமல் எந்தத் தொழிலையும் செய்யலாம்; வயிற்றுப்பிழைப்புக்காகத் தொழில் செய்வது ஒன்றும் அவமானமில்லை. உனக்கு ஒரு வேலை கிடைக்கும்வரை இதைச்செய். அப்புறம் உன்விருப்பம்போல எதையாவது செய்து கொள்' என்று புனிதம் கூறியபோது ரகுவின் நிலை தர்மசங்கடமாகியது. முன்பின் அறிமுகமில்லாத தனக்கு அவள் இவ்வளவு செய்கிறாளே என்று அவன் தயங்கி நின்றதை அவள் தவறாக விளங்கிவிட்டாளோ என்று வருத்தப்பட்டவனாய் "அப்படியெல்லாம் இல்லை... ஒரு நாளும் கண்டிராத எங்களை நம்பி இவ்வளவும் செய்கிறீர்களே... இதற்கெல்லாம் நாம் எப்படிக் கைமாறு செய்வது என்றுதான் யோசித்தேன். பரவாயில்லை இப்போது பாருங்களேன்... உங்கள் கையில் இருக்கும் அத்தனை சீமெந்து பைகளையும் ஒருகை பார்த்தபின்புதான் இரவு தூங்கப் போவது. பவானி கூட எனக்கு உதவப்போகிறாள், இருந்து பாருங்களேன்...' என்று கூறிக் கொண்டே அவன் அவள்கையில் இருந்த அத்தனை பொருட்களையும் பெற்றுக் கொண்டு காலையில் அமர்ந்த இடத்தில் மணல்மேல் உட்கார்ந்து கொண்டான். "பொறு தம்பி டீ(?) கொண்டு வாறன்" என்று புனிதம் கூறியதை அவன் கவனித்ததாகத் தெரியவில்லை.

ரகுவின் கரங்கள் முதலில் சிறிது பின்னிழுத்தபோதும் புனிதம் வந்து சிறிது உதவியபின் துரிதமாக வேலை செய்யத் தொடங்கியது.

ஐந்து மணிக்குள் அவன் எண்பது பைகளுக்கு மேல் செய்து குவித்து விட்டான். கை தன் பாட்டுக்கு வேலையைச் செய்து கொண்டேயிருக்க மனம் மட்டும் ஏதோ சிந்தித்துக் கொண்டேயிருந்தது.

புனிதத்திடம் அவன் ஏதோ பொய் கூறித் தப்பிவிட்டபோதும் மனம் மட்டும் அவனைச் சித்திரவதை செய்து கொண்டேயிருந்தது. அவனைப் பொறுத்தவரையில் அவனுக்கு அது கேவலமான தொழில்தான். திடகாத்திரமான கைகளையும் கால்களையும் வைத்துக் கொண்டு இப்படியான சோம்பேறித்தொழில் செய்வதை அவன் சிறிதும் விரும்பவில்லை. இருந்தும் புனிதத்தின் புஷ்பம் போன்ற உள்ளத்தைப் புண்படுத்தக் கூடாது என்ற ஒரு காரணந்தான் அவனை இவ்வளவு உற்சாகமாக இயங்க வைத்தது.

வலிய வந்த சீதேவியைக் காலால் எட்டி உதைத்துத் தள்ளுவது போல எவ்வளவோ கஷ்டப்பட்டு அவன் பெற்ற அரசாங்க உத்தியோகமும் பறிபோன நிலையில் அவன் வேறு என்ன தான் செய்ய முடியும்...? நல்ல காலம் இந்தக் குழப்பங்கள் நடந்து கொண்டிருந்தால் இதுவரை அவன் தனது உத்தியோகஸ்தானத்தைக் காலி செய்து விட்டதாகக் கருதிக் கொள்வார்கள் என்று மன நிம்மதி பெற்றான். அல்லது வேலையைக் காலி செய்வதற்கு அவன் வேறு விளக்கங் கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கும். அல்லது அவனைத் திடீர் எனக் காணவில்லை என்ற செய்தி பத்திரிகையில் கொட்டை எழுத்தில் வெளியாகி அவன் மானம் முழுவதும் போய்விட்டிருக்கும். இறைவன் எதையும் நன்மைக்கே செய்கிறான் என்று மனதைத் தேற்றிக் கொண்டு அவன் வேலையில் ஈடுபட்டிருந்த சமயம் 'என்னண்ணை இது, என்ன வேலை செய்து கொண்டிருக்கிறீங்க... அடடே இந்தப் புதிய தொழில் எப்போதிலிருந்து ஆரம்பமோ... என்று கேட்டுக் கொண்டே எழுந்து வந்தாள் பவானி.

'ஓ... ஓ... எழுந்து விட்டாயா தங்கச்சி... வா... வா உன்னை எழுப்பிக் குழப்பக் கூடாது என்றுதான் விட்டனான். இப்ப நல்லாத் தூங்கி விட்டாயல்லவா... இனி இந்தத் தொழிலைத் தொடர்ந்து செய்வது உன்ர வேலைதான். நமக்கும் இதுக்கும் ஒத்துப் பட்டு வராது. இது உன்னைப் போன்ற பெண்களுக்குத் தான் ஏற்ற வேலையம்மா.

எனக்கு ஏதாவது இழுக்க வேண்டும். அல்லது கொத்த வேண்டும். அந்த அம்மாவுக்காக பொறுமையாக இருந்து இவ்வளவும் செய்து முடிச்சன். இரண்டரை ரூபா இருந்த இடத்தில் உழைத்து விட்டேன். ஆமாம் தங்கச்சி! ஒருபை செய்து கொடுத்தா மூன்றுசதம் கூலியாம். சரி... உனக்கும் தேத்தண்ணி விடாய்க்குமாக்கும்! உனக்கில்லாட்டியும் என், மருமானுக்கு வேண்டுமல்லவா? பாவம் இதற்கெல்லாம் அவர்களைத் தொந்தரவு படுத்தக் கூடாது. நீ சத்தம் காட்டாமல் இருந்து கொள் நான் இந்த முன்கடைக்குச் சென்று எல்லாருக்குமாக ஒரு போத்தல்ல வாங்கியாறன்... உம்...' அவன் தன் பாட்டுக்குச் செல்லமாகப் பேசிக் கொண்டே போக பவானி வெட்கத்துடன் தலை குனிந்து கொண்டு தன் வேலையில் ஈடுபடத் தொடங்கினாள்.

அவளுக்கு ரகு ஒரு மனிதப் பிறவியாகவே தோன்றவில்லை. தெய்வந்தான் மனித உருவில் வந்து தனக்கு உதவுவதாக அவள் நினைத்துக் கொண்டாள். உடன் பிறந்த சகோதரன் கூட இவ்வளவு தூரம் உதவ முன்வர மாட்டான் என்பது அநுபவத்தில் இருந்து அவள் அறிந்து கொண்ட உண்மை. ரகுவை மட்டும் அவள் அன்று சந்தித்திருக்காவிட்டால் அவள் இறந்த இடத்தில் இன்று புல் கூட முளைத்திருக்கும். இனி என்னதான் வந்தாலும் அவனுக்காகத் தான் உயிர்வாழ்ந்தே ஆவது என்ற திடமான முடிவுக்கு வந்து விட்டாள். தன் காதலனைக் கண்டு பிடித்து அவனிடம் ரகு தன்னை எப்படியாவது ஒப்புவித்து விடுவான் என்ற நம்பிக்கை அவளுக்கு நிறைய இருந்தது. அதனால் தன் வயிற்றில் இருந்த சிசு அவளுக்கு இப்போது பாரமாக [illegible] அவமானமாக [illegible] [illegible]. அந்தச் சிசுதான் தன்னையும் பிரிந்துபோன தன் காதலனையும் ஒன்று சேர்க்கப்போகும் வரப்பிரசாதமாக எண்ணி மகிழ்ந்தாள். அந்த நேரத்தில் அவள் கைகள் அவளையும் அறியாமல் அவள் வயிற்றைத் தடவிக் கொடுத்தன. ஒரு தாயின் பூரிப்பை அவள் அன்றுதான் அடைந்தாள்.

'என்ன தங்கச்சி பலமான யோசனை... பிறக்கப்போவது பெண்ணா ஆணா என்ற சிந்தனையாக்கும் பயப்படாதே உனக்குப் பையன் தான் பிறப்பான்.' என்று கேலியாகச் சிரித்துக் கொண்டே ரகு தேநீர் நிறைந்த ஒரு போத்தலை அவள் பக்கத்தில வைத்தபோது சிந்தனை கலைய அடக்கமாகச் சிரித்துக் கொண்டாள் அவள். 'உம்' குடி தங்கச்சி! நீ குடிச்சிப் போட்டு அந்த அம்மாளுக்குக் கொடு. நான் கடையில் குடித்திட்டன்...' என்று கூறிக் கொண்டே அவள் பக்கத்தில் அமர்ந்து கொண்டான் அவன். அதற்குள் புனிதமே அங்கு வந்து விட்டாள்.

பவானி, மடக்மடக்' என்று நான்கு மிடற்றைக் குடித்துவிட்டு மிகுதியைப் புனிதத்திடம் நீட்ட 'இதென்ன தங்கச்சி தேநீர் கடையிலா வாங்கினீங்க...? அடுப்புப் பற்ற வைக்கத் தான் வந்தன். அதற்குள் தம்பி வாங்கி வந்திடிச்சா... இனிமே மட்டும் நீங்க எதுவும் கடையில் வாங்கக் கூடாது. இது உங்க வீடு... உரிமையோடு என்னிடம் கேட்கலாம் அப்படிக் கேட்கப் பிடிக்காட்டிப் போனால் குசினியில் எல்லாம் இருக்கு. விரும்பியதை செய்து சாப்பிடலாம். அநியாயமா பணத்தையெல்லாம் எதற்குக் கடையில கொண்டேக் கொட்டுவான்...? என்று சற்று உரிமையுடன் அவள் கண்டித்த போது அவள் கூறுவதை ஆமோதிப்பது போல இருவரும் தலையைச் சாய்த்துக் கொண்டனர். இப்படியே ஹாயாக இரண்டு நாட்கள் கழிந்தன. இப்போது புனிதம் வேறு அவர்கள் வேறு என்ற வித்தியாசமின்றி இரண்டு குடும்பங்களும் மிகவும் அந்யோன்யமாகப் பழகத் தொடங்கியிருந்தார்கள். ஆயினும் ரகுவுக்குப் பவானியை நீண்ட நாட்கள் அங்கு விட்டு வைப்பதில் துளிக்கூட விருப்பமில்லாமல் இருந்தது. அதற்குக் காரணம் அங்கு நிலவிய சூழலும்சுற்றுடலுந்தான்.

சாயந்திரங்களில் ஆணும் பெண்ணுமாகக் குடித்து விட்டு அங்கு, அடித்த கொட்டத்தையும் கும்மாளத்தையும் பார்க்கப் பார்க்க ரகுவுக்கு அருவருப்பாக இருந்தது. அவர்கள் பரிமாறிக் கொண்ட பேச்சும், பிடித்த சண்டையும் அவனைப்பொறுமையிழக்கச் செய்தன. எப்படித்தான் புனிதம் இவற்றைச் சகித்துக் கொண்டிருக்கிறாளோ என்றுகூடச் சிந்திக்கத் தோன்றியது. இரண்டு நாட்கள் இவற்றையெல்லாங் கவனித்த பின்பு எப்படியாவது ஒரு சிறு வேலையாவது தேடிக்கொண்டு பவானியை வேறிடத்திற்கு அழைத்துப் போய்விட வேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்டான்.

ஒருவாரத்தின் பின் அவன் பவானியிடம் கூறிவிட்டு வெளியே சென்றான். ஒவ்வொரு கடையாக அலைந்தும் ஏறி இறங்காத படியில்லை ஆனால வேலை மட்டுங் கிடைத்தபாடாக இல்லை. கடைசியாக சிலநாட்கள் அலைந்ததன் பயனாக ஒரு டாக்டர் வீட்டில் அவனுக்கு வேலை கிடைத்தது. அந்த டாக்டரின் பிரத்தியேக டிஸ்பென்ஸரியில் காவல் புரியும் வேலைக்கு மாதம் நூறு ரூபா சம்பளத்திற்கு அமர்த்தப்பட்டான்.

வேலைநேரம் பிற்பகல் ஆறு மணியில் இருந்து அடுத்த நாள் விடிய ஆறுமணிவரையாக இருந்தபோதும் அவன் மட்டும் எப்போதும் ஐந்து மணிக்கே சென்று விடுவான். டிஸ்பென்ஸரியைக் கூட்டிப் பெருக்கி பூமரங்களுக்குத் தண்ணீர் வார்த்து டாக்டரின் காரைக் கழுவி இன்னும் பல வேலைகளைத் தன் விருப்பத்திற்கே செய்வான். இவற்றையெல்லாம் டாக்டர் அவதானித்தபோதும் அவனிடம் செய்யென்றும் சொல்லவில்லை செய்யாதே என்றும் சொல்லவில்லை. அவர் ஏதாவது சொல்லுவார் என்று காத்திராமல் ரகுவும் தன்பாட்டுக்கு அந்த வேலைகளையும் நாட்தவறாமல் செய்து வந்தான். இப்படியே இரண்டு மாதங்கழிந்ததும் இரண்டாம் மாதக்கடைசியில் டாக்டர் அவனிடம் சம்பளமாக நூற்றி ஐம்பது ரூபாவைக் கொடுத்தபோது அவன் திடுக்கிட்டுமேல்மிச்சமாக இருந்த ஐம்பது ரூபாயையும் அவரிடம் திருப்பி நீட்டினான்.

அவனை அந்த நிலையில் பார்த்த டாக்டர் சிரித்தார் என்னப்பா... பணம் போதாதென்று பார்க்கிறாயா... என்று அவர் தன் பேச்சை ஆரம்பிக்கு முன்பே "இல்லை ஸார்...அப்படியெல்லாம் ஒன்றுமில்லை என் சம்பளப் பணத்திற்கு மேலாக ஐம்பது ரூபா உள்ளது. அதுதான் சிந்திக்கிறேன் என்றான் பணிவோடு. அவன் முதுகிற் தட்டிக் கொடுத்த டாக்டர்...

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறீ எதிர்ப்பை தமிழரசு கைவிட்டு விட்டதா?



## கேட்டுப்பாருங்கள்!

திருவாளர் குயுக்தி

இ. அம்புறோஸ்,
ஊர்காவற்றுறை.

கே: எந்த அரசாங்கமும் தமிழருக்கு நன்மையை செய்ய விரும்பாத பட்சத்தில் தமிழரசுக்கட்சி போராட்டத்தில் குதிக்காமல் ஏன் தயங்குகிறது?

ப: வினை வலியும், தன் வலியும் மாற்றான் வலியும் துணை வலியும் தூக்கி செயற்படவேண்டுமென்று வள்ளுவன் கூறியதை கருத்திற் கொண்டுதான் போராட்டத்திற்கான காலம் கனியும் வரை கட்சி காத்திருக்கிறது!

ஃ

வீ. சண்முகம்
திருமலை.

கே: இலங்கைப் பார்லிமெண்டில் அண்ணாவுக்கு அனுதாபம் தெரிவிப்பதற்கு சிறீ லங்கா சுதந்திரக் கட்சி மறுப்பு தெரிவித்தது ஏன்?

ப: அண்ணா தமிழர்களின் தலைவர் என்பதால்!

ஃ

பொ. கலைச்செல்வி,
ஏழாலை மேற்கு.

கே: அடுத்த பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி, போட்டியிடும் அத்தனை தொகுதிகளிலும் வெற்றி பெறும் என்கிறேன் நான். நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

ப: உங்கள் ஆசை நிச்சயம் நிறைவேறும்!

கே: சிங்கள நிறுவனம் ஒன்றிலிருந்து வெளிவரும் பத்திரிகையான தினபதி தமிழர்களுக்காக நீலிக்கண்ணீர் வடிப்பதன் மர்மம் என்ன?

ப: வீழ்ந்திருக்கும் விற்பனையை பெருக்குவதற்குத்தான்!

ஃ

கே: பைத்தியகாரனுக்கும் மதுவின் போதையிலிருப்பவனுக்கும் என்ன வேற்றுமை?

ப: பைத்தியக்காரன் செய்யும் தவறுகளை நல்லவர் உலகம் மன்னிக்கும். மது வெறியன் தவறு செய்யும்போது அவன் முகத்தில் காறி உமிழும்!

கே: கடவுள்கூட, பெண்களுக்கு இல்லாத பல சலுகைகளை ஆண்களுக்களித்துப் பாரபட்சம் காட்டியிருக்கிறாரே!

ப: ஆண்களுக்கு எத்தனை சலுகைகளை யளித்தாலும், அவர்களை மயக்கி தங்கள் கைக்குள் போட்டுக்கொள்ளும் சக்தியை ஆண்டவன் பெண்களுக்கு மட்டும் தானே அளித்து இருக்கிறார்!

ஃ

கே. எஸ். இராசலிங்கம்,
குருநாகல்.

கே: தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களின் முகவரி யாது?

ப: பெயருடன், மூளாய், சுழிபுரம்.

ஃ

ஆ. செல்வராஜ்.
தலவாக்கொல்லை.

கே: தோட்டத் தொழிலாளிக்கு விசா எடுத்துத் தருவதற்கு உதவி புரிவதாகக் கூறி ஒரு நாளைக்கு ஐந்து போத்தல் ஸ்டவுட் லஞ்சம் வாங்குகிறாரே ஒரு தொழிற்சங்க பிரமுகர்?

ப: தோட்டத் தொழிலாளர்களை சுரண்டிச் சுரண்டி தங்கள் வாழ்க்கையை நடத்தும் குறித்த தொழிற்சங்கப் பிரமுகரையும் அவர் சார்ந்துள்ள தொழிற்சங்கத்தையும் தோட்டத் தொழிலாளர்களுக்கு அம்பலப்படுத்துங்கள்! அப்போதாவது திருந்துகிறாரா பார்ப்போம்!

ஃ

பி. யோகானந்த்,
உடுப்பிட்டி.

கே: தமிழரசுக் கட்சியால் முன்னுக்கு வந்தவர்கள் சிலர் கட்சியை இப்போது

## போராட்டத்திலிறங்க தமிழரசு தயங்குவதேன்?

தூற்றிக்கொண்டு இருக்கிறார்களே அவர்களைப் பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: தூற்றித் தூற்றி வாழ்ந்தனரில்லை, தி. மு. கழகத்தை விட்டுப் பிரிந்து சென்று அண்ணாவையும் கழகத்தையும் தூற்றித்திரிந்த சம்பத்தும், கண்ணதாசனும் இன்று எங்கே? அட்ரசே இல்லாமல் போய்விட்டார்களே! அதே நிலைதான் இவர்களுக்கும்!

ஃ

கண்ணன்,
வவுனியா.

கே: தேசிய அரசாங்கத்தில் ஜீ. ஜீ. ஏன் சேர்ந்தார்? அவர் சாதித்த விடயங்கள் யாவை?

ப: இதென்ன கேள்வி— யூ. என். பி. வேறு பொ. கட்சி வேறு? தமது 'நெருங்கிய' நண்பர் டட்லிக்கு கைகொடுப்பதைத் தவிர பொ.வுக்கு வேறு இலட்சியமும் இருக்கிறதா? அவர் 'சாதித்தது':- தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்கு மாவட்ட சபை என்னும் வீட்டைக் கட்டிக் கொடுக்க முயன்றபோது எதிரிகளுடன் சேர்ந்து அதற்கு கல்லுக்குத்தியது தான்!

கே: அடுத்த பொதுத் தேர்தலின்பின் பொ. கட்சியின் அரசியல் எப்படி இருக்கும்?

ப: தேர்தலின்போதே கொள்ளிக்குடம் உடைக்கப்பட்டுவிடுமே!

ஆறுமுகசாமி,
வல்வெட்டி.

கே: நீர் பொன்னம்பலத்தைத் தாக்குவதன் மர்மம் என்ன?

ப: நான் பொன்னம்பலத்தைத் தாக்கவில்லையே! அவரது தவறான அரசியலைத் தானே கண்டிக்கிறேன்!

கே: தற்பொழுது தமிழரசுக் கட்சியின் தலைவர் யார்?

ப: இரும்பு மனிதன்—ஈழத்துப் பட்டேல் டாக்டர் இ. மு. வி. நாகநாதன்!

ஃ

ம. ஸ்ரீகந்தராஜ்,
அல்வாய் வடக்கு.

கே: அறிஞர் அண்ணாவின் ஆங்கிலப் பேச்சை நேரில் கேட்டபின்னர் 'தனிப்பெருந் தலைவர்' என்ன யோசித்திருப்பார்?

ப: அண்ணா ஈழத்துக்கு வராமலிருக்க வேண்டும் என்று கடவுளைக் கும்பிட்டிருப்பார்!

கே: தமிழரசுக் கட்சி மீண்டும் போராட்டப் பாதையில் செல்ல தயங்குவதேன்?

ப: தயங்கவில்லை— காலம் கனியும்வரை காத்திருக்கிறது. அவ்வளவுதான்!

## தேசிய அரசாங்கத்தில் ஜீ.ஜீ.யின் சாதனை என்ன?

ஏ. லோகநாதன்,
நெடுங்கேணி.

கே: கள்ளனை நல்லவனாக்குவதற்கும் நல்லவனை கள்ளனாக்குவதற்கும் என்னசெய்ய வேண்டும்?

ப: தமிழரசுக் கட்சியில் சேர்ந்தால் கள்ளனும் நல்லவனாகி விடுவான். தனிப்பெருந் தலைவரின் கட்சியில் சேர்ந்தால் நல்லவனும் கள்ளனாகிவிடுவான்!

ஃ

கி. அம்புறோஸ்,
ஊர்காவற்றுறை.

கே: சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலும் பார்க்க யூ.என். பி. தமிழரின் உரிமையை அபகரித்துக்கொண்டு வருகின்றது என்பது எனது கருத்து. தங்கள் கருத்து என்ன?

ப: தமிழ் மக்களைப் பொறுத்தவரை யூ. என். பி. யும் சுதந்திரக் கட்சியும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களுக்கு சமம். யூ.என்.பி. குடியுரிமை, பிரதேச உரிமையைப் பறித்தது: சுதந்திரக் கட்சி மொழியுரிமை உத்தியோக தொழில் உரிமைகளைப் பறித்தது. ஆனால் இன்று இந்நாட்டில் தேசிய சிறுபான்மை இனத்துக்கு ஒரு நிரந்தர இடம் உண்டு என்பதை யூ. என். பி. ஒப்புக்கொண்டுவிட்டது. தமிழரசுக் கட்சியின் தலைமையில் தமிழ் மக்கள் நடத்திய உரிமைப் போராட்டங்களால்தான், ஐ. தே. கட்சி இந்நிலைக்கு இறங்கிவந்திருக்கிறது. ஆனால் சு. கட்சி இதைக்கூட ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லையே?

கே: அடுத்த பொதுத்தேர்தலில் தமிழரசுக் கட்சி எத்தனை ஸ்தானங்களை கைப்பற்றும்?

ப: வடக்கு கிழக்கிலுள்ள சகல தொகுதிகளையும் கைப்பற்றும்—உங்கள் ஊர்காவற்றுறைத் தொகுதி உட்பட!

ஃ

சொல்லின் செல்வன்'
கொட்டடி.

கே: அண்ணா கண்ட வெற்றியில் ஒரு வெற்றியை கூறுவீரா?

ப: தமிழ் நாட்டுக்கு அரசியல் சட்டபூர்வமாக 'தமிழ் நாடு' எனப் பெயர் சூட்டி உலகப்படத்தில் தமிழ்நாடு இடம்பெற வழிவகுத்தது தான் அவர் ஆற்றிய தலையாய பணி!

ஃ

ம: அன்ரன்,
மிருசுவில்.

கே: உலகில் மதிப்பில்லாத மனிதன் யார்?

ப: நாணயமில்லாதவன்!

ப: சோதிடம் உண்மையா?

ப: சோதிடத்தை விட மனோதிடம்தான் வாழ்விட வெற்றிக்கு அவசியம்!

ஃ

கே. இராமநாதன்,
கொழும்பு-12.

கே: தமிழரசுக் கட்சி சிங்கள சிறீ எதிர்ப்பைக் கைவிட்டுவிட்டதா?

ப: எதிர்ப்பையல்ல— இயக்கத்தைத் தான் கைவிட்டுவிட்டது. எப்படி ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, எத்தனையோ சட்டங்களிருக்கக்கூடியதாக உப்புச் சட்டத்தை அண்ணல் காந்தி மீறினாரோ, அதேபோல சிங்களத் திணிப்பை எதிர்த்து ஓர் அடையாளச் சட்ட மறுப்பாக சிறீ எதிர்ப்பு இயக்கத்தை தமிழரசுக் கட்சி நடாத்தியது; உப்புச் சத்தியாக்கிரகத்தை காந்தியடிகள் ஒரு முறைதான் நடத்தினார். தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கவில்லை. அதே போல சிங்கள சிறீ எதிர்ப்பியக்கத்தை தமிழரசுக் கட்சியும் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்க வேண்டியதில்லை. தமிழ்நாட்டில் இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து கலைஞர் கருணாநிதி தலைமையில் நடைபெற்ற தால்மியாபுரப் போராட்டம் தொடர்ந்து நடந்து கொண்டா இருக்கிறது? தால்மியாபுரம் இன்னும்கூட கல்லக் குடியாக மாறவில்லையே!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194. ஏ பண்டாரநாயக்கா வீதி
கொழும்பு—12

# புனைகதையில் ஆபாசம்!

இரசிகமணி
கனக. செந்திநாதன்



ஆபாசம் என்பது என்ன? என்பதே சர்ச்சைக்குரிய விடயம். 'வாசித்து முடிந்ததும் (பாலுணர்ச்சியை மிகுதிப் படுத்தியதினால்) மனதில் அருவருப்புணர்ச்சி தோன்றினால் அது ஆபாசம் என்ற வரைவிலக்கணத்துடன் பார்த்தால் அதை யாருமே வரவேற்க மாட்டார்கள்.

கருப்பொருள் தூய்மையாக இருக்கவும் அதை வேண்டுமென்றே அலங்கோல வர்ணனைகளால்—தன் முத்திரை இது என்று காட்ட—எழுதும் எழுத்தாளர்கள் ஒருசிலர் இருக்கிறார்கள். இவர்களை வாசக உலகம் விரைவில் கண்டுபிடித்துத் தூக்கி எறிந்துவிடும்.

ஆபாசமான கருப்பொருளைக் கலைத்துவப் படைப்பாக எழுதி வெற்றிபெற்றவர்கள் இருக்கிறார்கள். அந்தக் கருப்பொருளையே எடுத்துக்கூறி 'பார்,பார், ஆபாசம்' என்று கூச்சலிடுவோர் அநேகருளர்; இப்படியான கலைப் படைப்புக்கள் ஈழத்துக்கு மாத்திரம் உரியதல்ல. அநேகமாக எல்லாமொழிகளிலும் இப்படியான படைப்புகள் உண்டு, இவற்றை யாரும் ஆபாசம் என்றே சொல்வதில்லை.

இதற்கு உதாரணமாக, தி. ஜானகிராமனின் 'அம்மாவந்தாள்' என்ற நாவலை குறிப்பிடலாம். தமிழ் நாட்டுப் பிரபலமான வார சஞ்சிகையொன்று அந்த நாவலின் கருப்பொருளைச் சுட்டிக் காட்டி கொஞ்சம் கடுமையாகத் தாக்கியது. ஆனால், தமிழில் இதுவரை வெளிவந்த எல்லா நாவல்களிலும் சிறந்த படைப்பு அதுதான் எனத் தமிழ் நாட்டு எழுத்தாளரில் அநேகர் தீர்ப்பும் கூறிப் பரிசும் அளித்திருக்கிறார்கள்.

நமது வாழ்க்கையில், நடையில், உடையில், சினிமாவில் மிதமிஞ்சி ஆபாசத் தன்மை கூடிவருகிறது. அதற்கு எழுத்தாளராயுள்ளோரும் ஆதரவு தரக்கூடாது. கம்பராமாயணத்தில், நைடதத்தில், புராணங்களில் இல்லாத ஆபாச வர்ணனையா நாம் எழுதிவிடுகிறோம் என்று கேட்பவரும் உண்டு. எதற்கும் ஒரு அளவு வேண்டும். வாசித்து முடிந்ததும் மனத்தில் தங்கியுள்ளது எது? என்பதே அளவுகோலாகும். மேலை நாட்டிலே பா[illegible]ச் சினைய மையமாகக் கொண்ட 'ஆபாசக்' கதைகள் ஏராளமாக இருக்கின்றனவே என்று கூறுபவர்களுக்கு 'நமது பண்பாடு வேறு' என்பதுதான் விடை.

மனோதத்துவ ரீதியில் அமைந்த பாலுணர்ச்சிக் கதைகள் தேவை என்பது உண்மை; அதற்காக அவை பச்சைப்படியான ஆபாசத்தில்தான் எழுதப்பட வேண்டுமா? ஆபாச எழுத்தைச்சிலர் குறுக்குவழியில் முன்னேற உபயோகிக்கிறார்கள். 'கள்ளிப்பலகையில் மேசை செய்வது சுலபம்; ஆனால் அது [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# முளையிலேயே கிள்ளி எறிக!

சிங்கள இனவெறியர்கள் மீண்டும் வாளேந்தி விட்டனர். சிறுபான்மையினருக்கு எதிராக — குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு எதிராக — தென்னிலங்கை முழுவதும் துவேஷப் பிரசாரம் தீவிரமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டு வருகிறது: பௌத்த பிக்குகளும், ஆர்: ஜி. போன்ற சிங்கள இனவெறியர்களும், இத்துவேஷப் பிரசாரத்தின் மூலகர்த்தாக்களாக விளங்கி வருகின்றனர். சிங்களப் பொதுமக்களின் ஆத்திரத்தையும் வெறுப்பையும் தமிழ் மக்களுக்கு எதிராகத் திருப்பிவிட்டு நாட்டில் கொந்தளிப்பை மூட்டி இனக் கலவரத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் நடந்து வருகின்றன.

தமிழ்பேசும் மக்களுக்கு எதிராக நடத்தப்படும் இனவெறிப் பிரசாரம் பல மூலைகளிலிருந்து வெடித்துக் கிளம்புவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. தமிழ்ப் படங்களைத் தடை செய்ய வேண்டுமென்ற காட்டுக் கூச்சல் ஒரு புறம் பூதாகாரமாகக் கிளப்பப்பட்டு வருகிறது. இது முற்று முழுதாகத் தமிழ் மக்களுக்கு நேரடியாக விடுக்கப்படும் ஓர் சவாலாகும்.

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். நடித்த படங்கள் தமிழின உணர்வைத் தூண்டுவதாகவும், அப்படங்கள் சிங்கள இனத்துக்கு எதிராகத் தமிழர்களைக் கிளர்ந்தெழப் பண்ணுகின்றனவென்றும் அவரது படங்களுக்கு உடனடியாகத் தடைவிதிக்க வேண்டும் என்றும் பிரசாரம் செய்யப்படுகிறது. இது அப்பட்டமான பொய் கலந்த ஓர் விஷமப் பிரசாரம் என்பதில் சந்தேகமில்லை.

இந்நாட்டுத் தமிழ் மகனுக்கு இன உணர்ச்சி ஏற்படுகிறது என்றால் அதைக் கண்டு சிங்கள இனவெறியர்கள் நடு நடுங்கி அலறுவதேன்? ஈழத் தமிழினத்துக்கு ஏற்பட்டு வரும் விழிப்புணர்வும் இன உணர்வும் எம். ஜி. ஆர். படங்களைத் தடை செய்வதால் மட்டும் குன்றிவிடுமா? தமிழ் மக்களுடைய நியாயமான உரிமைகளை வழங்கி, அவர்களுடைய அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாவிட்டால் — என்றோ ஒரு நாள் பொங்கியெழப்போகும் தமிழ் எழுச்சியின் முன்னால் சிங்கள இனவெறி தூள் தூளாகப் போவது சர்வ நிச்சயம் என்று எச்சரிக்கிறோம்.

இலங்கையில் எங்குமே இல்லாத 'நாம் தமிழர்' இயக்கத்தாலும் பலமான அமைப்போ, உறுப்பினர்பலமோ அற்று வெறும் 'லேபலில்' மட்டும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகங்களாலும் — இலங்கைக்குப் பேராபத்து ஏற்படவிருக்கிறதென்றும் அவற்றைத் தடைசெய்ய வேண்டும் என்றும் சிங்கள மக்களின் கண்களில் மண்ணைத் தூவும் மற்றொரு பிரசாரமும் முழுமுரமாக முடுக்கி விடப்பட்டு வருகிறது. நாம் தமிழர், இ. தி. மு. க. ஆகிய பெயர்களை உபயோகித்து இந்நாட்டுத் தமிழ் மக்களுக்கு எதிராக வசைபாடி வருகின்றனர் சிங்கள இனவெறியர்கள்.

இலங்கையில் இன்று உடனடியாகத் தடைசெய்யப்பட வேண்டிய கட்சியுண்டென்றால், அது ஆர். ஜி. சேனநாயகாவின் சிங்கள மகாஜனக்கட்சிதான். இந்நாட்டில் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வரும் சிங்கள — தமிழ் மக்களிடையே வெறியைக் கிளப்பிவிட்டு மோதலை ஏற்படுத்தி நாட்டின் ஐக்கியத்தைச் சீர் குலைப்பதற்கு ஆர். ஜி. கட்சியே முயன்று வருகிறது ஆகவே இன்றைய ஆட்சியாளர்களுக்கு தேசிய ஐக்கியத்தை இந்நாட்டில் கட்டிக்காப்பதில் அந்தரங்க சுத்தியான ஆர்வமிருந்தால் — ஆர். ஜி. கட்சியை தாமதமின்றித் தடை செய்யும்படி அழைக்கிறோம்.

இலங்கையின் சுயாதிபத்தியத்தையும், சுதந்திரத்தையும் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வதாக காலஞ் சென்ற அறிஞர் அண்ணாவும் இன்றைய தமிழ் நாட்டு முதல்வர் கலைஞர் கருணாநிதியும் திட்டவட்டமாக அறிவித்த பின்னரும் — இலங்கை மீது தமக்கு அரசியல் நோக்கம் எதுவும் கிடையாது என்று தெளிவாக்கியபின்னரும்-இங்குள்ள இனவெறியர்கள் தி. மு. க. பூச்சாண்டி காட்டியும் தி. மு. க. இலங்கையை விழுங்குவதாக விஷமத்தனமான கவரொட்டிகள் வைத்தும் இழிதகைப் பிரசாரத்தை தீவிரமாக நடத்துகிறார்கள் என்றால் — அப்பிரசாரம் நிச்சயமாக இந்நாட்டுத் தமிழ் மக்களுக்கு எதிராக திருப்பிவிடப்பட்டுள்ள ஒன்று என்பதை எவரும் மறுக்கமுடியாது. இத்தகைய பிரச்சாரங்களுக்கு இந்நாட்டுத்தமிழர்கள் சிறிதும் அஞ்சமாட்டார்கள்; பணிந்துகொடுக்க மாட்டார்கள் என்பதை இங்கு அழுத்தமாக குறிப்பிட விரும்புகிறோம்.

இதேவேளையில் சிறுபான்மை இனங்கள் சிங்கள இனத்துடன் இரண்டறக்கலந்து விடவேண்டும் என்றும் சிங்கள இனம் அவற்றை உண்டு ஜீரணித்துவிட வேண்டுமென்றும் இன ஒழிப்புத் திட்டமொன்றும் அடிக்கடி வெளியிடப்பட்டு வருகிறது.

பௌத்த பிக்கு ஒருவரும் கடந்த வாரம் 'டைம்ஸ் வீக் எண்டர்' ஏட்டில் இதை அதரித்து கட்டுரையொன்று எழுதியுள்ளார்.

இத்தகைய பகல் கனவுகளில் காலம் கழிக்க வேண்டாம் என்று சிங்களத் தீவிர வாதிகளுக்கு இடித்துக்கூற விரும்புகிறோம். வேறு எந்த இனம் தனது தனித்துவத்தை இழக்க ஒருப்பட்டாலும் தமிழினம் தன் தனித்தன்மையை ஒருபோதுமே இழக்காது என்பதை சிங்கள வெறியர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சிங்கள இனத்துக்கு இந்நாட்டில் எவ்வளவு உரிமைகள் உண்டோ அவ்வளவு உரிமைகளும் தமிழினத்துக்கும் உண்டு. இந்நாட்டில் தமிழினத்துக்கு நிலையான வரலாறும் மரபுவழியான தாயகமும் உண்டு. பரங்கியர் போன்ற வந்தேறு குடிகள் வேண்டுமானால் சிங்கள இனத்துடன்கலக்கலாம். ஆனால் தமிழினம்தன் தனித்தன்மையை எந்த நிலை ஏற்பட்டாலும் விட்டுக்கொடுக்கமாட்டாது. இதை சிங்கள மக்கள் தெளிவாகக் குறித்து வைத்துக் கொள்ளட்டும்!

ஒன்றுபட்ட இலங்கையின் கீழ் —சமஷ்டிக்குட்பட்ட தமிழரசு நிறுவி —தனித்துவத்தைக் காப்பாற்றுவதற்குத் தான் தமிழ் பேசும் மக்கள் இன்று போராடி வருகிறார்கள். இது சாத்தியமாகாத பட்சத்தில் தமிழினம் தனியாகப் பிரிந்து போகுமே தவிர தனது தனித்துவத்தை சிறிதும் இழக்காது என்பதை சிங்களச் சகோதரர்கள் உணர்ந்து கொள்வார்களாக.

இறுதியாகப் பிரதமருக்கு நமது வேண்டுகோள் இதுதான்: நாட்டில் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்படும் துவேஷப் பிரசாரத்தை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்துவிட நடவடிக்கை யெடுங்கள். அதை முற்றவிட்டால், நீங்கள் கட்டி யெழுப்புவதாகக் கூறிக் கொள்ளும் தேசிய ஒற்றுமை மறுபக்கத்தால் இடிந்து விழுந்துவிடும். தமிழ்—சிங்கள மக்களிடையே மேலும் [illegible] எண்ணங்களும் ஆழமாக வேரோடிவிடும். இந்நிலை ஏற்படுவது நாட்டின் நலனுக்கும் ஐக்கியத்துக்கும் உகந்ததல்ல.

# தமிழ்ப் படக் கட்டுப்பாடு சிங்கள ஆட்சியின் பாசிச சட்டம்!

ஆட்டைக் கடித்து மாட்டைக்கடித்து மனிதனைகடித்தகதைபோல, இந்நாட்டிலே வாழும் தமிழினத்தவரின் அடிப்படை உரிமைகளை ஒவ்வொன்றாகப் பறித்து வந்த ஆட்சியாளர்கள் இன்று அவர்களது பொழுது போக்கு உரிமையிலும் கைவைத்துவிட்டனர். புதிய தமிழ்ப்படங்கள் அகில இலங்கையிலும், மூன்று பிரதிகளுக்கு மேல் திரையிடக் கூடாது என்று பாசிசச்சட்டம் ஒன்றை அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது.

தமிழ்ப்படப் பிரதிகள் திரையிடுவதற்கு அரசாங்கம் விதித்துள்ள கட்டுப்பாட்டின் பின்னால் மறைந்துள்ள பயங்கர இன ஒழிப்புத் திட்டத்தை கடந்தவார சுதந்திரன் ஆசிரியத்தலையங்கம் அம்பலமாக்கியிருந்தது. அரசாங்கத்தின் இத்திட்டத்தை எதிர்த்து தமிழரசுக் கட்சி கடுமையான நடவடிக்கைகள் எடுத்துவருவது குறித்து மகிழ்ச்சியடைகிறோம்.

### இனவெறி பிரசாரம்

அதே வேளையில், தென்னிலங்கையில் தமிழ்ப் படங்களுக்கு எதிராக சிங்கள இனவெறி முடுக்கி விடப்பட்டு வருகிறது. குறிப்பாக மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் நடித்த படங்களுக்கு முற்றாகத் தடை விதிக்க வேண்டுமெனவும், எம்.ஜி.ஆர். படங்கள் தி.மு.க. பிரசாரம் நடத்துவதாகவும், எம்.ஜி ஆர். தி. மு. க. விலுள்ள ஓர் தமிழ் இனவெறியர் என்றும் சிங்களவர் மத்தியில் பிரச்சாரம் நடத்தப்பட்டு வருகிறது. இத்தகைய இழிந்த தமிழ்த்துவேஷப் பிரசாரத்துக்கு பின்னால் ஆர். ஜி. போன்ற சிங்கள இனவெறியர்களும், பௌத்த பிக்குகளும் சில சிங்களப் படத் தயாரிப்பாளர்களும் காணப்படுகிறார்கள்.

இதில் ஆகச்சிரிப்புக்கும் வேதனைக்கு முரியது என்னவென்றால், சில வருடங்களுக்கு முன்பு மக்கள் திலகம் எம். ஜி. ஆரை இங்கு வரவழைத்து அவரைக் காட்டி பணம்திரட்டிய சிங்களப் பத்திரிகை ஸ்தாபனம் ஒன்றும் இப்பிரசாரங்களுக்கு முக்கியத்துவம் அளித்து வருவது தான்.

### தமிழ்ப்படத் தடை

தமிழ்ப் படங்களைத் தடை செய்யக்கோரும் தீர்மானங்களை சிங்களப் பகுதியிலிருக்கும் சில உள்ளூராட்சி மன்றங்களும் நிறைவேற்றி வருகின்றன.

தமிழ்ப்படத் தடையை வலியுறுத்துமிவர்கள், ஆங்கில, இந்திப் படங்களைப் பற்றி மூச்சுக்கூட விடுவதாக இல்லை. இதிலிருந்தே இக்கோரிக்கை தமிழினத்தவருக்கு மட்டுமே எதிரான பச்சை வகுப்புவாதத்திலிருந்தே பிறந்துள்ளது என்பது தெளிவாகத்தெரிகிறது.

சிங்களப்படத்தயாரிப்பு நசிந்து போகின்றது என அண்மைக்காலமாக எழுந்துள்ள காட்டுக் கூச்சல்—தமிழ் படங்களைத் தடை செய்விப்பதற்காகவே தோன்றியுள்ளது.

சிங்களப் படத்துறையை வளர்ப்பதற்கு பொறாமையும் பொச்சரிப்பும் உதவாது. திறமையும், ஊக்கமும்தான் தேவை. இதை தமிழ்ப்படங்களை தடைசெய்யக் கோரும் சிங்களப் படத் தயாரிப்பாளர்கள் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

### 20 வீதம் வெட்டு

கடந்த ஆண்டே தமிழ்ப் பட இறக்குமதியில் சிங்கள ஆட்சி கைவைத்து விட்டது. மொத்த இறக்குமதியில் இருபது வீதம் வெட்டப்பட்டது. ஆங்கிலப்பட இறக்குமதியிலும் இருபது வீதமாகக் குறைத்துக் கொண்டது. ஆனால் தமிழ்ப் பட வெட்டையும் பத்து வீதமாக குறைக்கும்படி விடுத்த வேண்டுகோள்கள் புறக்கணிக்கப்பட்டுவிட்டன.

இந்நிலையில் இந்த ஆண்டு முதல் திரையிடப்படும் தமிழ்ப்படங்களின் பிரதிகளின் தொகையையும் ஆக மூன்றே மூன்றாக வெட்டிக் குறைப்பதென்றால், இதுவா தமிழ் பேசும் மக்களுக்கு இந்த அரசாங்கம் காட்டும் நீதி நியாயம் என்று கேட்கிறோம்!

### உள்ளூர் தமிழ்படத்துறை

இலங்கையில் தமிழ்ப் படத்தயாரிப்புத்துறை மண் விளையாட்டுப் பருவத்தில் இருக்கிறது. இதை இங்கு தயாரித்துவெளியிடப்பட்ட தமிழ்ப் படங்களைப் பார்த்தவர்கள் நன்கு புரிந்து கொண்டிருப்பார்கள். ஆகவே, அரசாங்கம் உடனடியாகச் செய்ய வேண்டியது இறக்குமதியாகும் தமிழ்ப் படங்களுக்கு கட்டுப்பாடு விதிப்பதல்ல; இங்குதமிழ்ப்படங்கள் நல்ல முறையில் தயாரிப்பதற்கு ஆக்கமும், ஊக்கமும் வசதியும் வாய்ப்பும் செய்து கொடுக்க வேண்டும்.

# அதை எதிர்த்து கட்சிபேதமின்றி தமிழ் மக்கள் கிளர்ந்தெழட்டும்!

சிங்களத் திரைப்படத் துறைக்கு அரசாங்கம் செய்யும்உதவிகள், சலுகைகளில், கால்வாசியாவது உள்ளூர் தமிழ்ப்படத்துறைக்கு செய்கிறதா என்றால் கிடையாது.

எனவே, ஆட்சியாளர்கள் உள்ளூரில் தமிழ்ப் படத் தயாரிப்புத்துறை வளர்ச்சியடைவதற்கு சகல ஒத்துழைப்பையும் முதலில் அளிக்கட்டும், சிங்களப்படத்துறைக்கு வாரிவழங்கும் அதே அளவு உதவிகளையும் சலுகைகளையும் பாரபட்சமின்றி தமிழ்ப்படத்துறைக்கும் அளிக்கவேண்டும். இப்படி செய்து ஒரு பத்தாண்டுகள் கழித்து — இலங்கையிலும் மக்கள் ரசனையுள்ள சிறந்த தமிழ்ப் படங்கள் தயாரிக்க முடியும் - தயாரிக்கலாம் என்ற நம்பிக்கைபிறந்தபின்னர் வேண்டுமானால் இறக்குமதியாகும் தமிழ்ப்படங்களைக் கட்டுப்படுத்துவது பற்றி சிந்திக்கலாம்.

அதை விடுத்து திடுதிப்பென்று இறக்குமதியாகும் தமிழ்த் திரைப்படங்களுக்கு கட்டுப்பாடு விதிப்பது தமிழ் மக்களின் உரிமைகளில் கைவைத்து அவர்களின் வெறுப்பையும் ஆத்திரத்தையும் கிளறுவதாகவே முடியும் என்று எச்சரிக்கிறோம்.

### புதிய உரிமை கோரவில்லை

தமிழ் பேசும் மக்கள் புதிதாக எந்த உரிமைகளையும்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசாங்க ஊழியர்களுக்கு 2ம் தர பதவியுயர்வு வழங்குவதில்

# ஏன் இந்தப் பாரபட்சம்?

# 220க்கு 37 மட்டும் தானு?

## பிரதமரிடம் அழகக்கோன் கேள்வி!



"அரசாங்க ஊழியர்களுக்கு இரண்டாந்தர பதவி உயர்வு வழங்குவதற்காக கடந்த ஆண்டு செப்டம்பர் 13ந் திகதி நடைபெற்ற பரீட்சை முடிவுகள் சிறுபான்மை மக்களுக்கு பலத்த ஏமாற்றத்தை அளித்துள்ளது. சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த அரசாங்க ஊழியர்களுக்கு மிகக் குறைவான வாய்ப்புக்களே வழங்கப்பட்டுள்ளன.

"இப்பரீட்சை முடிவுகளின் படி மொத்தம் 220 பேர் சித்தியடைந்துள்ளனர். சித்தி பெற்றவர்களில் 37 பேர் மட்டுமே சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். எதற்காக இந்தப் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது? சிறுபான்மை மக்களுககு கணிசமான அளவு பதவி உயர்வுகள் வழங்க உடன் நடவடிக்கை யெடுக்கப்படவேண்டும்"

—இவ்வாறு மன்னர் பா. உ. திரு. வி. ஏ. அழகக் கோன், பிரதமர், நிதியமைச்சர், திறைசேரி செயலாளர், திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் ஆகியோருக்குஅனுப்பியுள்ள அவசரத்தந்தியில் கோரியுள்ளார்.,

## தமிழின விடுதலைக்கு உழைக்க முன் வருக!

## தமிழ் மகளிர்களுக்கு திருமதி அமிர் அழைப்பு

"நாம் சிங்கள நெருக்கடி இல்லாத இடத்தில் வாழ்கிறோம். அதனுல் இங்குள்ளோருக்குச் சிங்கள நெருக்கடி பற்றிய தொல்லைகள் எதுவும் தெரியவில்லை. யாழ்ப்பாணத்திற்கு அப்பால் தமிழ் அரசாங்க ஊழியர்களுக்குநடக்கும் சிங்களக் கெடுபிடிகள் சொல்லுந்தரமன்று. தமிழர் பகுதிகளான திருகோணமலை, வவுனியா போன்ற தமிழ் பகுதிகளில் திட்டமிட்ட தீவிர சிங்களக் குடியேற்றம் நடைபெற்று வருகிறது. இதையெல்லாம் ஆட்சி மன்றத்திற்குச் சென்று கண்டித்து பெருமளவில் தடுத்து நிறுத்தி வருகிறுர்கள் நமது தமிழ் பிரதிநிதிகள். ஆசிரியர் இடமாற்றம் அரசாங்க உத்தியோகம் போன்றவை மட்டுந்தான் நமது பிரச்சினை இல்லை. இதை நமது தாய்மார்களும் நன்குணர வேண்டும், நமது குழந்தைகள் அரசாங்க உத்தியோகம் பெறவேண்டும் என்ற குறுகிய எண்ணத்தை— ஆசையை விட்டு— பரந்த நோக்கில் 'தமிழ்க் குழந்தைகள் எல்லாம், சகல உரிமைகளும் பெற்று அமைதியான வாழ்வு பெற தாய்மார்கள் பெருமளவில் உழைக்க வேண்டும்'

இவ்வாறு சித்தங்கேணியில் நடைபெற்ற மாதர் முன்னணி அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரையாற்றிய இ. த. அ. க. மாதர் முன்னணி பொதுச் செயலாளர் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் கூறினர்.

விழாவில்கலந்து கொண்ட திரு. சி. கதிரவேற்பிள்ளை;

இதன்பின் திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. பேசினர்,

இ. த. அ. க. மாதர் முன்னணி சித்தன்கேணிக் கிளையின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்:- திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ., திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், திருமதி. கனகம்மா செல்வத்துரை.

தலைவி! திருமதி. சுப்பிரமணியம் பேரின்பநாயகி, உப தலைவி: செல்வி. பத்மாவதி அப்புத்துரை, காரியதரிசி: செல்வி. சற்குணதேவி நடராஜா, உப காரியதரிசி; செல்வி. விஜயகுமாரி இலகுப்பிள்ளை, தனதிகாரி; திருமதி. பரமேஸ்வரி கணபதிப்பிள்ளை.

நிருவாக உறுப்பினர்கள்: திருமதிகள்: கு. செல்வநாயகி, சி. பொன்னம்மா, இ. செல்வமலர், சி. இராசம்மா, தி. நாகேஸ்வரி, ச. நீதிநாயகம், செல்விகள்; பொ. தெய்வநாயகி, த. நாகேஸ்வரி; க. நீலாவதி, சு. நகுலேஸ்வரி. த. இராஜேஸ்வரி.

# ஒற்றையாசிட் முறையை எதிர்த்து கி. பாகிஸ்தானில் பெருங் கிளர்ச்சி!

## பிரதேச சுயாட்சி கோரி மாணவர்கள் போராட்டம்!

கிழக்கு பாகிஸ்தானின் பிரதேச சுயாட்சிக் கோரிக்கையை உதாசீனம் செய்து ஒற்றையாட்சி அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்த ராவல் பிண்டியில் நடைபெற்ற அரசியல் கட்சிகளின் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டதை எதிர்த்து கிழக்கு பாகிஸ்தான் மக்கள் பெருங் கிளர்ச்சியில் இறங்கியிருக்கிறார்கள்.

ஒற்றையாட்சி அமைப்பை ரத்துச் செய்து ஓர் சமஷ்டி ஆட்சியின் கீழ் கிழக்கு பாகிஸ்தானுக்கு மாகாண சுயாட்சி வழங்கும் படி கோரி, கிழக்கு பாகிஸ்தானிலுள்ள எல்லா அரசியற்கட்சிகளும் கூட்டாக ஒருபெரிய கிளர்ச்சியை நடத்த விருக்கின்றன.

பிரதேச சுயாட்சி இயக்கத்தை ஆரம்பிப்பதற்காக கிழக்கு பாகிஸ்தான் முழுவதுமுள்ள மாணவர்கள் கடந்த வாரம் பெரும் வேலை நிறுத்தத்திலீடுபட்டனர்.

பாகிஸ்தானுக்கு புதிய அரசியல் திட்டத்தை ஏற்படுத்துவதற்காக ராவல் பிண்டியில் அரசியல் கட்சிகளின் மாநாட்டை ஜனுதிபதி ஆயூப்கான் கூட்டியிருந்தது தெரிந்ததே.

கிழக்கு பாகிஸ்தானில் பிரதேச சுயாட்சி ஏற்படுத்தப்படவேண்டும் என்றும் ஜனத்தொகை அடிப்படையில் கிழக்கு பாகிஸ்தானுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டுமெனவும் கிழக்கு பாகிஸ்தான் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் வற்புறுத்தினர்கள். ஆனுல் இக் கோரிக்கைகளை மாநாடு ஏற்க மறுத்துவிட்டதுடன், ஒற்றையாட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்கவும் முடிவெடுத்தது.

இம்முடிவை எதிர்த்து கிழக்கு பாகிஸ்தான் மக்கள் இப்பொழுது பெருங் கிளர்ச்சியிலிறங்கியுள்ளனர். பல இடங்களில் வன்முறைச் செயல்களும் நடைபெற்று வருகின்றன.

பிரதேச சுயாட்சிக்கோரிக்கையை வெற்றியடையச் செய்யும் கிளர்ச்சியில் மாணவர்கள் மிகத்தீவிரமாக இறங்கியுள்ளனர். பிரதேச சுயாட்சி இயக்கத்தை ஆரம்பிப்பதற்காக கிழக்கு பாகிஸ்தானிலுள்ள சகல அரசியற் கட்சிகளும் ஒரு பெரிய கிளர்ச்சியை கூட்டாகஆரம்பிக்க இருக்கின்றன.

கிழக்குப் பாகிஸ்தானுக்கு ஸ்தல சுயாட்சி பெறவும், 'ஒருறுப்பு' அமைப்பை ரத்துச் செய்யவும் கிளர்ச்சி விரைவில் ஆரம்பமாகும் என்று கிழக்குப் பாகிஸ்தான் தலைவர்கள் விடுத்துள்ள அறிக்கையிலிருந்து தெரிகிறது. பல்வேறு கட்சிகள் கூட்டு சேர்ந்து நடவடிக்கை எடுப்பதற்கு முனைந்திருக்கின்றனர். அவர்களுடைய இயக்கம் எவ்வாறு அமையும் என்பது இந்த மாத இறுதியில் தெரியும்.

பிராந்திய சுயாட்சியும் தேர்ந்தெடுக்கப்படும் அசெம்பிளியில் ஜனத்தொகை அடிப்படையில் பிரதிநிதித்துவமும் அளிக்கப்பட வேண்டும் என்று கிழக்கு பாகிஸ்தானின் பல தலைவர்கள் வற்புறுத்துகின்றனர். இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றியாக வேண்டும் என்று ஷேக் முஜிபர் ரஹ்மானும் மௌளலாஞ பாஷானியும் வற்புறுத்துகின்றனர்.

## வவுனியா பிரதம கல்வி அதிகாரி எம். பியின் கைப் பொம்மையா?

வவுனியாத் தொகுதியிலுள்ள அப்பாவி ஆசிரியர்கள் சிலர் திடீர் இடமாற்ற உத்தரவு கிடைக்கப்பெற்று பெரும் கலவரம் அடைந்துள்ளார்கள். மாற்றம் கோராது ஓரளவு திருப்தியுடன் கடமை செய்து வந்த இவ்வாசிரியர்களுக்கு 12-3-69ல் மாற்ற உத்தரவுகள் கிடைத்தன. இவர்கள் 15-3-69ல் புதிய பாடசாலைகளிற் கடமையேற்கவேண்டியிருக்கிறது. சிலருக்குப் பிரயாணச் செலவு வழங்கப் படுமெனக் குறிக்கப் படவில்லை. ஆனுற் சில ஆசிரியர்களுக்கு நூறு யாருக்குள்ளேயுள்ள பாடசாலைகளுக்கு, மாற்றம் கிடைத்திருக்கிறது.

வருஷக் கணக்காக ஒரே பாடசாலையிற் கடமையாற்றும் ஆசிரியர்கள் அங்கேயே சகல வசதிகளுடன் அமர்ந்திருக்க, வேறு சிலர் பந்தடிக்கப் படுகிறுர்கள். தற்போதைய பிரதம கல்வி அதிகாரி வந்தபின்னர் ஆறு மாச காலத்துள் மூன்று பாடசாலைக்கு மாற்றப்பட்ட ஆசிரியர்களும் இருக்கிறுர்கள் எனச் சொல்லப்படுகிறது.

தற்போது மாற்ற உத்தரவுகள் கிடைக்கப் பெற்ற ஆசிரியர்களிற் சிலர் வவுனியாப் பிரதம கல்வி அதிகாரியிடம் சென்று தங்கள் கஷ்ட நஷ்டங்களைக் கூறி மாற்ற உத்தரவுகளை ரத்து செய்யும் படியும் ரத்து செய்ய முடியாவிட்டால் சொற்ப நாளைக்குப் பிற்போட்டுத் தரும் படியும்.

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய அரசியல் நிலையும் இலங்கைத் தமிழரசுக் கட்சியு

அண்மையில் வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழரசுக் கட்சிக்கிளையின் ஆண்டுவிழாக்கூட்டத்தில் தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் அரசியல் விளக்கம் நிறைந்த ஓர் அரிய உரையை நிகழ்த்தினார். தமிழரசுக் கட்சி மீது மாற்றார் தொடுக்கும் குற்றச் சாட்டுக்களுக்கெல்லாம் கிழியக்கிழியப் பதில் தந்ததோடு தமிழரசுக்கட்சியின் இன்றைய அரசியல்நிலையையும் தெளிவாக எடுத்துரைத்தார்.

திரு. அமிர்தலிங்கம் ஆற்றிய சொற்பொழிவை கட்டுரை உருவில் இங்கு வெளியிடுகிறோம்...

நாலு வருட மௌனத்தின் பின் எமது பிரசாரம் மீண்டும் ஆரம்பமாகி இருக்கின்றது. எமது மௌனத்தைப் பயன்படுத்தி கட்சியைப் பற்றியும் எமது கொள்கையைப் பற்றியும் இல்லாததும் பொல்லாததும் கூறித் தீவிர பிரசாரத்தில் எமது விரோதிகள் இறங்கினர். தமிழினத்தை அழிப்பதற்கு முதற்படியாகத் தமிழரசுக் கட்சியை அழிக்கவேண்டுமென்ற கருத்தில் சிங்கள வகுப்புவாதிகள் தமது ஆதிக்கத்திலுள்ள தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகள் மூலம் கட்சிக்கு எதிராகப் பிரசாரஞ் செய்தனர். தமிழினம் அழிந்தாலும் தமது தலைமைப்பதவியை மீண்டும் பெறுவதற்குத் தமிழரசுக் கட்சியை அழிக்கவேண்டுமென்று கருதும் தமிழ் காங்கிரஸ் கட்சியினர் கட்சியைத் திட்டுவதே வேலையாகச் செய்து வந்தனர். தமிழ் தீவிரவாதிகள் என்று தம்மைக் கருதிக்கொள்ளும் சிலர் தந்தை செல்வநாயகம் முதல் கட்சித் தலைவர்கள் அத்தனை பேரையும் துரோகிகள் என்று பட்டஞ்சூட்டிப் பிரசாரஞ் செய்து வந்தனர். இத்தனைக்கும் மத்தியில் நாம் மௌனமாக இருந்தோம். கட்சி தாக்கப்பட்டபோதும், கட்சிச் செல்வாக்கு பாதிக்கப்படுவதைப் பார்த்துக்கொண்டு நான்கு ஆண்டுகள் பேசாதிருந்தோம். இதற்குக் காரணமென்ன?

நமது பிரசாரத்தினால்,— நம்மைத் தாக்குவோருக்கு நாம் அளிக்கும் பதிலால்,—அரசாங்கத்திடமிருந்து நாம் இனத்திற்குப்பெற்ற நன்மைகளை விபரித்துக் கூறுவதால்— எமது அதிமுக்கிய கோரிக்கையான மாவட்டசபை மசோதா நிறைவேற்றப்படுவது தடைப்படுமென்று அஞ்சியே அத்தனைக்கும்மத்தியில் மௌனமாக இருந்தோம்.

## காங்கிரஸ் ஒப்பாரி

1957ம் ஆண்டு நடந்ததை நமது மக்கள் மறந்திருக்கமாட்டார்கள். நாம் நடத்திய தீவிர இயக்கங்களின் பலனாக காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயகா எம்மோடு ஒரு ஒப்பந்தம் செய்யும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தமிழினத்தின் இழந்த உரிமைகள் ஒரு சிறிதாவது கிடைக்கும் என்ற உறுதி ஏற்பட்டது.

நாம் தமிழுரிமை கோரி இயக்கங்கள் நடத்தியபோது வாளாவிருந்த தமிழ் காங்கிரஸ் தலைவர் ஒப்பந்தம் செய்யப்பட்டவுடன் ஒப்பாரி வைக்கத் தொடங்கினார். தந்தை செல்வநாயகம் தமிழ் இனத்தை விற்றுவிட்டார் என்று ஓலமிட்டார். ஒப்பந்தத்தினால் தமிழ் இனத்திற்கு வரக்கூடிய நன்மைகளை நாம் விளக்கினோம். விளக்கவேண்டிய நிர்ப்பந்தத்தைத் திரு. பொன்னம்பலம் ஏற்படுத்தினார். எமது விளக்கங்கள் தென்னிலங்கையில் ஒப்பந்தத்தை எதிர்ப்பவர்களுக்கு வாய்ப்பாக இருந்தன.

பிரதமர் பண்டாரநாயகா சிங்கள இனத்தை திரு. செல்வநாயகத்திற்கு விற்றுவிட்டாரென்று திரு. டட்லி சேனநாயகாவும் சகாக்களும் சிங்கள மக்களைத் தட்டி எழுப்பினர். புத்தகுருமார் ஒப்பந்தத்தை நிராகரிக்கும்படி பிரதமரின் இல்லத்தில் சத்தியாக்கிரகம் செய்தனர். ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. இது நடந்தது 1958 ஏப்ரல் 9ந் திகதி. ஒப்பந்தத்தைக் கிழித்தெறியுங்கள் அடுத்த நாளே மாற்றுத் திட்டம் தருகிறேன் என்று அறைகூவிய அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் தமது தொழில் பார்க்கச் சென்றுவிட்டார். பத்து வருடங்களுக்கு மேலாகியும் மாற்றுத்திட்டம் எதையும் இதுவரை அவர் தரவில்லை. எம்மைத் திட்டுவதைத் தவிர, நாம் பெற முயற்சித்தவற்றைத் தடுத்ததைத் தவிர வேறு எந்தத் திட்டமும் அவரிடம் இல்லை.

## அவரது சாதனை

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் பண்டா—செல்வா ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருந்தால் எமது நிலை எவ்வளவோ உயர்ந்திருக்குமென்று ஒப்பந்தத்தை எதிர்த்த பலரும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். 1964ம் ஆண்டு சிறிமாவோ அரசாங்கத்தின் உயிர் ஊசலாடிக்கொண்டிருந்த நேரத்தில், ஆதரவு தரும்படி எம்மை வேண்டியபோது, பண்டா - செல்வா ஒப்பந்தத்தை நிறைவேற்றும்படி கேட்போம் என்றார் இன்றைய உப-சபாநாயகரும் தமிழ் காங்கிரஸ் பொதுச்செயலாளருமாகிய திரு. சிவசிதம்பரம். அதன் பின்பு நாம் பெறக்கூடியவையாக இருந்தவை அந்த ஒப்பந்தத்தினால் அளிக்கப்பட்ட உரிமைகளிலும் பார்க்கக் குறைந்தவையேயன்றிக் கூடியவையல்ல என்பதை எவரும் ஏற்றுக்கொள்வர். தமிழ் காங்கிரஸ் தலைவரின் தனிப்பெரும் சாதனை இதுதான்.

அதேபோன்ற ஓர் நிலையை மீண்டும் ஏற்படுத்த முயற்சித்தனர் தமிழ் காங்கிரசார். தன் மகன் இறந்தாலும் மருமகள் கொட்டம் அடங்கவேண்டும் என்று நினைக்கும் அறிவிலி மாமியைப்போல தமிழ் மக்கள் உரிமை பெறாவிட்டாலும் தமிழரசுக் கட்சி பெற்றதென்று இருக்கக் கூடாதென்பதற்காக நாம் பெற முயற்சிப்பவற்றைத் தட்டிக்கொட்டும் கைங்கரியத்தைச் செய்துவருகின்றனர்.

## உதவாக்கரை அண்ணன்

1965ம் ஆண்டு எமது உதவியின்றி அரசாங்கத்தை அமைக்கமுடியாதென்ற நிலை இருந்தபோது, எமது இனம் இழந்த உரிமைகள் சிலவற்றைத் திருப்பித் தருவதற்கு திரு. டட்லி சேனநாயகாவை ஒப்புக்கொள்ளச் செய்தோம். ஒரு நாட்டின் பிரதமரை இப்படிக் கட்டுப்படுத்தும் சந்தர்ப்பம் ஒரு சிறுபான்மை இனத்திற்கு எப்போதும் ஏற்படமாட்டாது. எப்போதாவது ஓரிரு சந்தர்ப்பத்தில்தான் இப்படியான நிலை ஏற்படும். அந்தக் கட்டுப்பாட்டைப் பயன்படுத்திச் சிங்கள மக்களை அரசாங்கத்திற்கு விரோதமாகத் தூண்டிவிட நாளும் பொழுதும் எதிர்க்கட்சிகள் முயற்சி செய்துகொண்டிருந்தன. அன்றிருந்த அவசர தேவையில் பிரதமர் கொடுத்த வாக்கைக் காற்றில் பறக்கவிடச் செய்ய ஆளும் கட்சியிலேயே பல்வேறு சக்திகள் முயற்சித்துக்கொண்டிருந்தன.

காமமயக்கத்தில், அந்த நேர அவசரத்தில், கல்யாணம் செய்வேனென்று கன்னிப் பெண்ணுக்கு வாக்குறுதி கொடுக்கிறான் காளை. வாக்கை நிறைவேற்றவிடாது தடுக்கின்றனர் அவனுடைய பெற்றோர். அவசரம் தீர்ந்துவிட்ட அவனுக்கும் நழுவிவிட விருப்பம். ஆனால் எழுத்தில் கொடுத்துவிட்டேனே, நீதிமன்றத்தில் நிறுத்துவாளே, சந்தி சிரிக்கச் செய்வாளே என்று தயங்குகிறான் அவன். அந்தநேரத்தில் பெண்ணின் அண்ணன் ஒருவன் அவனை வாக்கைக் காக்கச் செய்து தங்கையைக் கரையேற்றாது, அவனுக்கு உதவியாக அவன் தப்புவதற்கு ஒத்தாசையாக இருப்பானானால் அந்த அண்ணனை ஊர் என்ன சொல்லும்? அந்த உதவாக்கரை அண்ணனின் வேலையைத்தான் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தமிழ் இனம் என்ற தங்கைக்கு செய்துவருகிறது.

## மாவட்ட சபை

1965ம் ஆண்டு எமக்கு அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளில் ஒன்று மாவட்ட சபைகளை நிறுவி, அதிகாரத்தைப் பரவலாக்குவதன்மூலம் தமிழ் மக்கள் தமது பிரதேசத்தில் ஓரளவு சுயாட்சி பெற்று தமது அலுவல்களைத் தாமே நிர்வகிக்கும் உரிமையை அளிப்பதென்பது. சிங்கள மக்கள் மத்தியில் அதற்கெதிரான துர்ப்பிரசாரம் தீவிரமாக நடந்தது. மாவட்ட சபைகளினால் தமிழ்நாடே இலங்கையில் உருவாகிவிடும், என்றனர். ஆளும் கட்சியிலும் பலர் எதிர்க்கத் தொடங்கினர். பிரதமரும் தத்தளித்துக்கொண்டிருந்தார்.

அந்த நேரத்தில் எமக்குச் சவால் விடுத்தார் திரு. பொன்னம்பலம். மாவட்டசபைகளால் தமிழ் இனத்திற்கு வரக்கூடிய நன்மைகளைத் தம்மோடு விவாதிக்க வருமாறு அறைகூவினார். திரு. பொன்னம்பலத்தோடு விவாதிப்பது எமக்குப் புதிதல்ல. பலமுறை பல பிரச்சினைகளை மக்கள் அரங்கில் விவாதித்தவர்கள், விவாதித்து வெற்றியும் பெற்றவர்கள். ஒருகாலத்தில் தமிழ் மக்களின் தனிப்பெரும் ஸ்தாபனம் என்றிருந்த தமிழ் காங்கிரசை தனியொரு பிரதிநிதியோடு நிற்குமளவிற்கு மக்கள் மத்தியில் செல்லாக்காசாக்கியவர்கள். ஆயினும் மாவட்டசபை பற்றி விவாதிப்பதை விலக்கினோம்.

## தலைவிதி இதுவா?

வெறும் வாயை மென்றுகொண்டிருந்தார் திரு. பொன்னம்பலம். அவருக்கு நாம பிடி அவல் கொடுக்கவேண்டாமென்று பேசாதிருந்தோம். எமது மௌனத்தையும் பயனபடுத்தி எம்மைத் திட்டினார்கள். 1957ம் ஆண்டு பண்டா—செல்வா ஒப்பந்தத்தின்மூலம் நாம சாதிக்க முயன்றதை முறியடிக்க முனைந்தார்கள். 1968ல் டட்லி-செல்வா ஒப்பந்தத்தின் மூலம் நாம் செய்ய முயன்றவற்றையும் முறியடிக்க வந்தார்கள். தமிழ் இனமே உன் தலைவிதி இதுவோ என்று ஏங்கவேண்டியிருக்கிறது.

தமிழ் இனத்தின் உரிமைகள் பறிபோவதைத் தடுத்து அவர்கள் பாதுகாப்போடு வாழ ஒரு கோட்டையைக் கட்டி எழுப்ப இலங்கைத் தமிழரசுக் கட்சி மூலம பதினன்கு பிரதிநிதிகளை அனுப்பி வைத்தார்கள். பெரிய கோட்டையை உடன கட்ட முடியாவிட்டாலும் மழை வெயில்படாது பாதுகாப்பாக இருந்து பின கோட்டையைக் கட்டுவதற்கு மாவட்டசபை என்ற குடிசையை அமைக்க முயற்சித்தோம். ஆனால் கோட்டையைக்கட்ட எம்மை அனுப்பிய அதே மக்கள் நாம கட்டக்கட்ட அதை இடித்துத் தள்ளுவதற்கும் மூன்று பேரைத் தமிழ் காங்கிரஸ் மூலம் அனுப்பி விட்டார்களே என்று தான் ஏங்கவேண்டியவர்களாய் இருக்கிறோம். வருங்காலத்திலாவது இந்நிலை ஏற்படாது தமிழ் பிரதிநிதிகள் அத்தனைபேரும ஒத்தகுரலோடு ஒருமுகமாகச் செயலாற்றக்கூடியதாகத் தமிழ மக்கள் செய்வார்களென்று நம்புகிறோம்.

ஒற்றுமையைப் பற்றிப்பேசும் போது தேர்தல் வருவதற்கு முன் ஒவ்வொரு முறையும் பறக்கவிடப்படும் ஒற்றுமைக் காற்றாடிகளைப்பற்றி நாம குறிப்பிடுவதாக எவரும் நினைக்க வேண்டாம். வடக்கே செல்வோரும் தெற்கே செல்வோரும ஒரே தோணியில் ஏறுவது ஒற்றுமையல்ல; ஒருமனத்தோடு ஒரே துறை முகத்தை நோக்கித் தோணியைச செலுத்தக் கூடியவர்களாகத் தோணியில் ஏறுவதுதான ஒற்றுமை. அந்த இலக்கு எது எனபதைத் தமிழ் மக்கள் முதல் தீர்மானிக்கவேண்டும்.

சென்ற இருபத்தொரு ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வருகின்ற ஒற்றையாட்சி முறையே சிறந்ததென்று தமிழ் காங்கிரஸ் கூறுகிறது. அடுத்தடுத்து புயல, இடி, மின்னல, சூறாவளி இவற்றால தாக்கப்பட்டுத் தமிழ்இனத்தின் வாழ்வும் ... ஆழ்ந்துவிடும அவல நிலைக்கு ஆளாகிவிட்ட இந்தத் துறையிலே ...றென்றைக்கும் இருப்போம் எ... கிறார் திரு. பொன்னம்பலம். ...தொருவருட அனுபவத்தின் ... அறிவுபடைத்த தமிழ் மக்கள் ... வழியை ஏற்றுக்கொள்ளமுடியு... வதற்கா ஒற்றுமை அதிலும் ... இனம் தப்பி வாழக்கூடிய வழி... சிலராவது மேற்கொள்வதே சா... தது.



## பிரிவினை

இன்னொரு வழியைத் திரு. சு... கம் காட்டினார். இன்று எம்மை... பிரிந்த திரு. நவரத்தினமும் அ... யில் செல்ல முயற்சிக்கிறார். ... பிரிவினை வழி. ஈழத் தமிழ் நாடு ... லங்கையில் இருந்து முற்றுக... தனியரசு அமைக்க வேண்டு... கூறுகிறார்கள். அதையும் நேராக... தைரியமில்லாமல் மகாராணியி... சிக்கு உட்பட்ட தனி டொமின... வேண்டுமென்று கூறுகிறார்கள்.

சட்டத்திலிருந்து தப்புவ... மகாராணியிடம் தஞ்சம் புகும ... நாட்டைப் பிரிப்பதற்கான ஒரு... இயக்கத்தை நடத்தக் கூடிய... எனபதை மக்களின் தீர்ப்புக்கே... விடுகின்றோம்.

பிரிவினையால் வரும் சாதக... களை அலசி ஆராய்ந்த பின்ன... ஆண்டுகளுக்குமுன் சமஷ்டிதா... டுக்கு உகந்த[illegible]ன்று ந[illegible] முடி... தோம். அ[illegible]றை திரு[illegible] நவ... மறந்தாலும் தமிழ் மக்கள் மற... டார்கள். சென்ற 10 ஆண்டுகளி... வினைகோரி இயக்கம நடத்திய ... வின சரித்திரத்தை சற்றுத் ... பார்த்தால் உண்மை புலப்படும... கோங்லிலிருந்து கட்டாங்கா ம... தைப் பிரிக்க முற்பட்ட இயக்கம... பலனைக்கொடுத்தது? நைஜீரியா... பயவ்ரு (BIAFRA) யாகா... பிரிக்க முற்பட்ட ஈபோஸ் (IBO... த்வர் அடைந்தகதி என்ன? அ... வழியில் தானும் ஆயுதப்போ... கூடிய நிலையில நமது மக்கள் இ... களா? நாட்டைப் பிரிக்கும் ஒ... இயக்கம இலங்கையும் ஈடுப... உலகபபோரான மத்தியிலே ஒ... சாத்தியமாகலாம. இவற்றைப... உணர்ந்த திராவிடநாடு முற்று... வேண்டும எனறுகோரிய அறிஞ... அவர்கள் இந்திய யூனியனுக்கு ... சுயாட்சித் [illegible]மிழகத்தை[illegible] தம... காக ஏற்று[illegible]காண்டா[illegible]

## செல்வா வழியில் அண்...

ஈழத் தமிழினத்திற்கு ... செல்வா காட்டிய அதே ... யைத்ம் தமது முதிர்ந்தஅரசிய... பவத்தைக்கொண்டு தமிழ் ந... களுக்கும காட்டிச் செ[illegible]றிரு... அறிஞர் அண்ணா. எனவே இ... லிங்கத்தோடு திரு. நவரத்... ''மூனா''யும் சேர்ந்து காட்டும் ... ழினத்திற்கு வாழ்வளிக்க முடி... பது தெளிவு.

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம்
யும்



...தத் துறையிலேயே என்
இருப்போம் என்று கூறு
...ான்னம்பலம். இருபத்
...னுபவத்தின் பின்னும
...மிழ் மக்கள் இந்த
...கொள்ளமுடியுமா? அழி
...மை அதிலும் பார்க்க
...ழக்கூடிய வழியை ஒரு
...கொள்வதே சாலச்சிறந்

...ிரிவினை

...ழியைத் திரு. சுந்தரலிங்
...இன்று எமமை விட்டுப்
...ரத்தினமும் அதே வழி
...பற்சிக்கிருர். அதுதான்
...த் தமிழ் நாடு தென்னி
...ந்து முற்ருகப்பிரிந்து
...க்க வேண்டுமென்று
...தையும் நேராகக் கூறுத
... மகாராணியின் ஆட்
...தனி டொமினியன் ஆக
...கூறுகிருர்கள்.


...ந்து தப்புவதற்காக
...தஞ்சம் புகும இவர்கள்
...தறகான ஒரு புரட்சி
...த்தக் கூடியவர்களா
...ின தீர்ப்புகளே விட்டு

...வரும் சாதக பாதகங்
...ய்த்த பின்னரே, 20
... சுயாட்சிதான நாட்
...று ந... முடிவு செய்
... திரு. நவரத்தினம
... மக்கள் மறக்கமாட்
... 10 ஆண்டுகளில் பிரி
...கம நடத்திய இனங்க
... சற்றுத் திரும்பிப
...மை புலப்படும். கொங
...கட்டாங்கா மாகாணத்
...பட்ட இயக்கம என்ன
...து? நைஜீரியாவிலிருந்து
...A) மாகாணத்தைப
...ஈப்பாஸ் (IBOs) இனத்
...தி என்ன? அவர்களின
... ஆயுதப்போர் புரிபக
...மது மககள் இருக்கிருர்
... பிரிக்கும ஒரு புரட்சி
...கையும ஈடுபட்ட ஒரு
...மத்தியிலே ஒரு வேளை
...ம். இவற்றையெல்லாம
...ட்டநாடு முற்ருகப பிரிய
...க்காரிய அறிஞர் அண்ணு
... யூனியனுக்கு உட்பட்ட
...த்தை ... தமது இலக
...ண்டா...

...வழியில் அண்ணு

...ழினத்திறகு தந்தை
...ய அந்த மார்க்கத்
...திர்ந்த அரசியல் அனு
...ண்டு தமிழ் நாட்டு மக
...ச் சென்றிருக்கின்றுர்
...). எனவே திரு. சுந்தர
...திரு. நவரத்தினத்தின்
...ந்து காட்டும் வழி தமி
...வளிக்க முடியாதென்

...கம் பார்க்க)




# தாய்

உள்ளங்கை போல்முகத்தான்
ஓர்சிறுசாண் உடலுடையான்
அள்ளுங்கண் வடிவழகன்
அழகுதமிழ்ப் பால்வாயான்
வெள்ளம்போல் முறுவலிக்கும்
வெறிநகையான் பொன்னுடலைக்
கொள்ளுங்கை இரண்டுடையாள்
கொடுத்துவைத்தாள்... அம்மாவோ,

சீரான காஞ்சியிலே
சித்திரத்தைப் பெற்றமகள்
ஊரனைத்தும் மறந்திருப்பாள்!
உயிரான கவிபடைத்து
நூறுன மகிழ்வடையும்
நூற்புலவன் ஒருவனைப்போல்
பேரமுதக் குழவியுடல்
பிறப்பித்தாள் மெய்மறப்பாள்!

தேன்கனியின் குலைசிரிக்கும்
செங்கதலி வாழைமரம்
தான்எனலால் மெய்மறந்த
தமிழச்சி தன்மகனை
ஆணெனுமோர் பேரழகை
அழகெனுமோர் ஆண்வடிவை
வான்நிலவை மார்பகத்தில்
வைத்துவைத்து மகிழ்ந்திருப்பாள்!

செம்மாந் தளிர்நாவில்
தித்திக்க ஊறிவரும்
'அம்மா' எனுமியற்கை
அழகுதமிழ் மொழிகேட்டு
மும்மாரி கண்டநிலம்
முறுவலித்து நின்றதுபோல்
அம்மாவாய் நகையவிழ்ப்பாள்!
அண்ணுவும் உடன் சிரிப்பான்!

வானத்தில் கண்புதைத்தே
வையகத்து ஞானியர்போல்
மோனத்தில் இளைத்திருப்பான்
முத்தழகன்....! தன்பாட்டில்
வானத்தைப் பார்த்தபடி
வாய்மொழிவான்! நகைவெடிப்பான்!
தேனெடுத்தாள் மனங்குளிர்ந்து
திடீர்முத்தம் ஒன்றுவைப்பாள்!

வண்ணப்பெண் மார்பகத்தில்
மணிவைரப் பால்சுவைக்கும்
சின்னப்பொன் வாயுடையான்
சிரித்தபடி தாய்மார்பைத்
தன்னெப்பி லாக்கரத்தால்
தட்டிவிளை யாடத்தாய்
'உன்னப்ப னும்நீயும்
ஒன்றேதான்' எனமுறைப்பாள்!

ஆழவிழி அவைநோக்கி
'அறிஞனடா நீ'என்பாள்!
கோலமுக எழில்கண்டு
'கொற்றவனே!' என அழைப்பாள்!
காலசைவும் கையசைவும்
காண 'இவன் கலைஞனெ'ன்பாள்!
வேளையொரு விதமழைப்பாள்!
விதம்விதமாய் அணைத்திருப்பாள்!

தங்கநகை பெறும்வரைக்கும்
தன்கழுத்தில் வெள்ளிநகை
தொங்கவிட்டாள் ஒருத்தி . தங்கத்
தொடையல்வர ... வெள்ளிநகை
எங்கோஓர் புறத்தெறிந்தாள்
என்ன இவள் கணவன்எனும்
சங்கதியை யும்மறந்தாள்!
தமிழ்மகனே டுறங்கிநிற்பாள்!

அடிப்பதுபோ லேஅடித்தும்
அடுத்தபொழு தேஅணைத்தும்
கடிப்பதுபோ லேகடித்தும்
கடித்தஇடம் வருடிவிட்டும்
இடிப்பதுபோ லேஇடித்தும்
இடிபட்டான் இதழை மதுக்
குடிப்பதுபோ லேகுடித்தும்
கோதைவெறி கொண்டிருப்பாள்!

வெண்துப்புக் கயிற்றினிலே
விரிபட்டுத் தொட்டிலொன்று
தன்பிள்ளைக் குக்கட்டி
தலையணையில் பூவரைந்து
பொன்பெற்ற தாய்மகனைப்
பூப்போலக் கிடத்திவைத்து
கண்பட்டுப் போகாமல்
கரியாலே பொட்டுவைப்பாள்!

ஆனையின்வெண் சிறுதந்தம்
அதுபோலே பழம்போலே
வானிலவுப் பிறைபோலே
வடிவழகன் தொட்டிலிடைத்
தானுட ... அன்னைவாய்
தாலாட்டும் போழ்தினிலே
தேனேடு பால்பொழியும்!
தித்திக்கும் காஞ்சிநகர்!

# தாலாட்டு

செந்தமிழே! தேனே!
திரவியமே! கற்கண்டே!
சந்தனமே! தென்றலே!
சர்க்கரையே! தாலேலோ!

நீ பிறக்க முன்பெல்லாம்
தாய் பிறக்க வில்லையடா...
தாய் பிறக்கக் காரணமாய்
வந்தவனே தாலேலோ!

பத்து மாதம் இறைவன்
பார்த்துப்பார்த் துச்செய்த
குத்து விளக்கே என்
குல விளக்கே... தாலேலோ!

தேவி இவள் உயிரைத்
தான் திருடி என்னத்தான்
பூவை' எனக்களித்த
புத்துயிரே ..... தாலேலோ!

கள்ளிருக்கும் பூவுக்குக்
-கண்முளைத்து வாய் முளைத்து
பிள்ளையென வந்துதித்த
பேரழகே ... தாலேலோ!

நாளை மலையாகும்
நல்லழகுத் தோளிரண்டால்
ஏழை எனை மயக்கும்
என்மகனே ... தாலேலோ!

வெற்பில் விளையாடும்
வேங்கை இளங் குட்டியென
அப்பன் மகிழவந்த
ஆண் மகனே தாலேலோ!

கோலமிகு செந்தமிழர்
கொற்றம் சிறக்கவென்று
காலம் படைத்தவனே!
கண் மணியே! தாலேலோ!

தங்கத் தமிழ்த் தாயாள்
தன்கை விலங்கொடியச்
சிங்கம் எனப்பிறந்த
தென்னவனே தாலேலோ!

ஓயாத தமிழர் பிணிக்
கோர்மருந்தாய் மாற்ருர்க்கு
நோயாய்ப் பிறந்தவனே!
தூயவனே தாலேலோ!

பொய்யும் மடமைப்
புரட்டும் நடுநடுங்கி
'ஐயோ', எனவந்த
அனற்பிழம்பே தாலேலோ!

மூடத் தனத்தில்
முழுகித் தமிழ்மறந்த
நாடு திருத்தவரும்
நாவரசே ... தாலேலோ!

எண்ணம் தமிழாய்
உயிர்தமிழாய் மெய்தமிழாய்
மண்மீது வந்த
மணித்தமிழே தாலேலோ!

பாண்டியனின் மூச்சே!
பழஞ்சோழன் இன்னுயிரே!
மாண்டொழிந்த சேரன்
மறுபிறப்பே தாலேலோ!

...தாலேலோ
தாயின் மணிவயிறு
பாலாய்க் குளிர்வந்த
பைந்தமிழா தாலேலோ!

(8-ம் பக்கத் தொடர்ச்சி)
கேட்டபோது அவர் 'எம். பி. சொன்னபடிதான் நான் செய்கிறேன். நீர் எம். பி யைப் போய்க் காணும்' என்றுசுருக்கமாக கூறிவிரைவில் அனுப்பிவிடுகிருராம்.

பங்குனி 27ல் பாடசாலைகள் முதலாம் பருவ விடுமுறைக்காகமூடப்படவிருக்கும் பொழுது 15-3-69 தொடக்கம் மாற்றலாகிச் செல்லும் ஆசிரியர்களுடைய முதலாம் தவணைப் பரீட்சை வேலைகளை எப்படிச் செய்வது? யார் செய்வது? என்று தெரியாமல் பாடசாலைத் தலைவர்கள் விழிக்கிருர்களாம்.

இந்த மாற்ற உத்தரவுகளாற் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் இந்தக் கல்வி அதிகாரி அடுத்த பொதுத் தேர்தலுக்காக எம். பிக்கு வோட்டுத் தேடும் முயற்சியில் நேரடியாக இறங்கிவிட்டாரோ என்று கூட ஐயப்படுகின்றனராம்.

மேற்படி மாற்றங்கள் எந்த அடிப்படையில் செய்யப்படுகின்றன என்பதும் அறிய முடியாத புதிராகவே தென்படுகின்றனவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சி மாறி கொள்கை மாறி தடுமாறுகிருர் நவரத்தினம்!

## சார்ந்த கட்சிக்கு துரோகம் புரிபவரின் சரித்திரமே இதுதான்!

''ஐயா, தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த 12 பாராளுமன்ற உறுப்பினர்களாலும் எதையுமே சாதிக்க முடியாமற் போய்விட்டதென்கிறீர்கள்; 12 பேரால் சாதிக்க முடியாததை—ஒரு மா பெரும் இயக்கத்தால் சாதிக்க முடியாததை—பலமான அரசியற் கட்சியற்று தனியொரு மனிதனுக நிற்கும் உங்களால் எப்படி சாதிக்க முடியும்?

—மேற்கண்டவாறு ஊர்காவற்றுறைத் தொகுதி மக்கள் ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினத்திடம் கேள்விக் கணை தொடுத்ததாக தெரிகிறது. திரு. நவரத்தினத்துக்கு கார் பரிசளிக்கப்பட்ட கூட்டத்திலே திரு. நவரத்தினத்திடம் மேற்கண்ட கேள்வி எழுப்பப்பட்டதாக அறியப்படுகிறது.

இதன் பின்னர், திரு. நவரத்தினம் வடக்கிலுள்ள சில தொகுதிகளிலாவது அடுத்த தேர்தலின்போது தமது சார்பில் வேட்பாளரை நிறுத்துவதற்கு இப்பொழுது வேட்பாளர் வேட்டையில் இறங்கியிருப்பதாக தெரிகிறது.

''ஆள்'' சேர்க்க முயற்சி

கிளிநொச்சி, கோப்பாய், ஆகிய தொகுதிகளுக்கு திரு. நவரத்தினம் சென்று 'ஆள்' பிடிக்கும் வேலையில் ஈடுபட்டதாகத் தெரிகிறது. தமிழரசுக் கட்சியிலிருந்து கட்சிக்கு துரோகம் புரிந்ததற்காக வெளியேற்றப் பட்டவர்களை தேடிப் பிடித்து வேட்பாளர்களாக்க திரு. நவரத்தினம் முயற்சிப்பதாக அறியப் படுகிறது.

திரு. நவரத்தினத்தின் 'பரிதாப' நிலை குறித்து ஊர்காவற்றுறைப் பிரமுகர் ஒருவர் நமது நிருபரிடம் கூறியதாவது:—

'தம்மை வளர்த்தெடுத்து உருவாக்கிய கட்சிக்கு துரோகம் புரிந்தவர்களின் அரசியல் சரித்திரம் விரைவில் முடிந்துவிடும். இதற்கு உதாரணமாக உலகில் பலசம்பவங்கள் நடைபெற்று இருக்கின்றன. உதாரணமாக தி. மு. கழகத்துக்கும் அண்ணுவுக்கும் துரோகம் புரிந்து கழகத்திலிருந்து வெளியேறிய சம்பத்தும் கண்ணதாசனும் இன்று இருக்குமிடமே தெரியாமல் போய்விடவில்லையா?

''அதே போன்று திரு. நவரத்தினத்தின் அரசியல் நிலையும் பரிதாபத்துக் குரியது. தமிழரசுக் கட்சிக்குள்ளிருந்தபடியே கட்சியின் எதிரிகளுடன் திரு. நவரத்தினம் தொடர்புகொண்டிருந்தார் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களும், தினபதி ஆசிரியர் திரு. எஸ். டி. சிவநாயகமும் சேர்ந்து விரித்த வலையில் சிக்கினர். இதன் பயனுக தமிழரசுக் கட்சிக்கட்டுப்பாட்டை மீறினர். கட்சிக்குத் துரோகம் செய்தார். இதனுல் கட்சிப்பொதுக்குழு திரு. நவரத்தினத்தை கட்சியிலிருந்து வெளியேற்றியது.

திரு. நவரத்தினம் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி நடப்பதற்கு, தமிழரசுக்கட்சி சார்பில் தம்மைத்தெரிவு செய்த ஊர்காவற்றுறை தொகுதி மக்களின் அனுமதியையோ, ஊர்காவற்றுறை தொகுதி தமிழரசுக் கட்சிக் கிளையின் அனுமதியையோ கூட பெறவில்லை.

## கோப்பாய், கிளிநொச்சியில் 'ஆள்' பிடிக்க முயற்சி!

கட்டுப் பாட்டை மீறியதற்காக, கட்சியின் பொதுக் குழுவால் வெளியேற்றப்பட்ட திரு. நவரத்தினம் நிலையான அரசியற் கொள்கையின்றித்தடுமாறிவருகிருர். யாழ். மலேயா கபே மேல் மாடியில் புதுக்கட்சி அமைப்பதற்காக திரு. நவரத்தினம் நடத்திய ஆலோசனைக் கூட்டமும் பிசுபிசுத்து விட்டது. திரு. நவரத்தினம் எதிர்பார்த்த அளவுக்குப் புதுக் கட்சி அமைப்பதை யாரும் வரவேற்கவில்லை.

''திரு. நவரத்தினம் மலைபோல நம்பியிருந்த விடுதலைகள் தமிழ் மக்கள் மத்தியில் செல்லாக் காசாகிவிட்டன. அவரது நெருங்கிய நண்பரான தினபதி ஆசிரியரும் காலைவாரிவிட்டு விட்டார்.

இந்த நிலையில் பரிதாபமாக அரசியற்பாலைவனத்தில் திரு. நவரத்தினம் சிக்கிக் கொண்டு மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவிக்கிருர்.

''தாம் சார்ந்த கட்சிக்கு துரோகம் செய்பவர்களின் சரித்திரமே இப்படித்தான். எவ்வளவு பெரிய 'மூளை' யானாலும் கட்சிக்கு துரோகம் புரிந்தால் அது கூழ்முட்டையாகிவிட வேண்டியதுதான். இதை மாற்றியமைக்க முடியாது.

தமிழரசுக் கட்சிக்கு துரோகம் புரிந்து அதிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் திரு. நவரத்தினம் கொள்கைக் குழப்பத்தால் தடுமாறி வருகிருர். இதோ அதற்கு சில உதாரணங்கள்.

(1) 20 ஆண்டுகாலமாகத் திரு. பொன்னம்பலத்தைப் பற்றித் தெரிவித்த கருத்துக்களுக்கு முரணுக அவருக்கு பாராளுமன்றத்திலேயே துதி பாடினுர்.

(2) தமிழரசுக்கட்சி அரசாங்கத்தை ஆதரிப்பதாக கட்சிமீது வசை புராணம் பாடிக்கொண்டு அதே மூச்சில் எதிர்க்கட்சியிலிருந்து கொண்டே தாமும் அரசாங்கத்தை ஆதரித்து வருகிருர்;

(3) வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மகாராணியின் ஆட்சிக்குட்பட்ட டொமினியன் அஸ்தஸ்து வேண்டும் என்ருர்.

(4) கார் பரிசளிப்புக் கூட்டத்திலோ இலங்கை முழுவதும் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து கோரிக்கை. (சம அந்தஸ்தும் டொமினியன் கோரிக்கையும் எப்படி ஒன்றுடன் ஒன்று பொருந்தும்?)

(5) அமைச்சர்களுக்கு தமிழரசு எம். பீக்கள் வரவேற்புக் கொடுக்கிருர்களே என்று நையாண்டி ஒரு பக்கம்; மறுபக்கம் தமிழரசு எம். பீக்களை விட சிங்கள மந்திரிகளுக்கு சிறப்பான வரவேற்பு வழங்குகிருர்.

''இப்படி கட்சி மாறி, கோலம் மாறி, குணம் மாறி, கொள்கை மாறி தடுமாறும் திரு. நவரத்தினத்தின் அரசியல் சகாப்தம் அடுத்த பொதுத் தேர்தலுடன் முடிவடைந்து விடுவது திண்ணம்.''

இவ்வாறு அப்பிரமுகர் கூறி முடித்தார்.

# சிறுபான்மை இனங்களை சிங்கள இனம் விழுங்கிவிட வேண்டுமாம்

இலங்கையிலுள்ள சிறுபான்மை இனத்தவர்கள் தங்கள் தனித்துவங்களையெல்லாம் மறந்து, பரிபூரணமாக பெரும்பான்மை இனத்துடன் சங்கமமாகி விட வேண்டும். பெரும்பான்மை இனமும் சிறுபான்மை இனங்களை தன்னுள் விழுங்கி விடவேண்டும். இப்படிச் செய்வதன் மூலம, காலப்போக்கில் இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லீம், பறங்கியர்கள் இருக்கமாட்டார்கள். ஆனுல், சிங்கள பௌத்தர்கள், சிங்கள இந்துக்கள், சிங்கள முஸ்லிம்கள், சிங்கள கிறிஸ்தவர்களேதான் இருப்பார்கள். ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்ப இது ஒன்றுதான் வழி.

—இவ்வாறு இந்துராவே பன்னதிச மகாதேரோ என்பவர் மார்ச் 19ந் திகதி 'டைம்ஸ் வீக் எண்டர்' பத்திரிகைக்கு, அளித்துள்ள பேட்டியொன்றில் கூறியுள்ளார்.

## புத்தபிக்குவின் இனவெறிக் கூச்சல்!

அப்பேட்டியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

''80 ஆண்டுகளுக்கு முன்பு பிரிட்டனில், ஆங்கிலோ-சாக்ஷன், செல்டிக்ஸ், நோர்வேஜியன்ஸ், வெல்ஷ், ஸ்கொஷ்ட்டி ஆகிய பல பிரிவு வகுப்புக்கள் இருந்தன. ஆனுல் இன்று-ஸ்கொட்டிஷ், வெல்ஷ் மக்கள் தங்கள் சொந்த மொழியை பேசினுலும், எல்லோரும் பிரிட்டிஷ் தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களாகவே கணிக்கப்படுகின்றனர்.

''அமெரிக்கா, பிரிட்டன், கனடா போன்ற நாடுகளுக்கு சென்று குடியேறும் இலங்கையர்கள் தங்கள் தேசிய இனத்தைக் கைவிட்டு ஆங்கிலத்தை தங்கள் தாய் மொழியாக ஏற்றுக்கொள்ள முடிகிறது என்றால், இந்நாட்டிலுள்ள சிறுபான்மை மக்களும் ஏன் அதைப் பின்பற்ற முடியாது?

''பெரும்பான்மை இனம், சிறுபான்மை இனத்துடன் இணைந்துவிட முடியாது, ஆனுல் சிறுபான்மை இனம் பெரும்பான்மை இனத்துடன் சுலபத்தில் சங்கமமாகி விடமுடியும். சிங்களவர் சிறுபான்மையினராக இருந்தாலும், இதைத்தான் நான் கூறுவேன்.

''இலங்கையில் இருமொழிகளைப் பேசும் இரு இனங்கள் தாம் உண்டு. இருஇனங்களுக்கும் பொதுவான அம்சங்களுமுண்டு. முஸ்லிம்கள் தங்கள் தாய் மொழியாக சிங்களத்தை ஏற்றுக் கொண்டு விட்டார்கள். ஆகவே இணைப்புக்கு இன்னும் என்ன தடை இருக்கிறது?

40 ஆண்டுகளுக்கு முன்பு ஆகாகான் இலங்கைக்கு விஜயம் செய்த போது, தங்கள் தனிப் பண்பாட்டை கைவிட்டுவிடும்படி முஸ்லிம்களுக்கு அறிவுரை கூறியிருந்தார்.

வெள்ளைக்கார ஆட்சிக்காலத்தில் முஸ்லிம்கள் தங்களை சிங்களவர்களாகவே கருதினர். சுதந்திரம் வந்தபின் எல்லாமே மாறிவிட்டன. முஸ்லிம்கள் கோராமலேயே பல்கலைக்கழகத்தில் அரபு மொழிக்கு தனிப்பீடம் ஏற்படுத்தப்பட்டது. இதனுல் இன்று முஸ்லிம்களுக்கு அரபு மொழியைப் படித்து தங்கள் தனிப் பண்புகளை காப்பாற்றும் ஆசை ஏற்பட்டுவிட்டது

யாழ்ப்பாணத் தமிழரை பொறுத்தவரையும் இதே தான். சுதந்திரத்துக்கு முன் அவர்கள் சிங்களத்தைப் படிக்க ஆயத்தமாக இருந்தனர். சிங்கள மொழியை போதித்துக் கொண்டு பௌத்த பிக்குகள் பலர் யாழ்ப்பாணத்தில் இருந்தனர்,

''இதன் பின் சமஷ்டிக் கட்சி மொழிப்பிரச்சினையை அரசியல் பிரச்சினையாக்கியது. ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஐம்பதுக்கு ஐம்பது கோரினுர். காலம் சென்ற எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா வகுப்புவாதம் பேசினுர். இதன் பயனுக, தமிழர்கள் சிங்களம் படிக்க மறுத்து வருகின்றனர்.

''பல தமிழ்ப் பெயர்கள் சிங்கள மூலத்திலிருந்து தோன்றியவை. உதாரணமாக, யாழ்ப்பாணம்-யாப்பபட்டுன வலிகாமம்: வெலிகம, சுன்னுகம்-ஹுணுகம, கொக்குவில் - கொக்குவில்ல ஆகியவற்றைக் கூறலாம்.

''சிங்களவர்களின் பரம்பரையில் உதித்த தமிழர்களும் இருக்கின்றனர்; தமிழர்களின் பரம்பரையில் உதித்த மதிப்பு வாய்ந்த சிங்களவர்களும் தென்னிலங்கையில் இருக்கின்றனர். நாணயக்கார, வாசன், வெல்லாலகே ஆகிய சிங்க-

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாலாட்டு...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

ஒற்றையாட்சியின் ஆபத்துக்களை விலக்கி பிரிவினையால் ஏற்படக்கூடிய இன்னல்களையும் தவிர்க்கும் மார்க்கமே தந்தை செல்வாவும், தமிழரசுக்கட்சியும் காட்டும் சமஷ்டி அல்லது இணைப்பு ஆட்சி என்ற அரசியலமைப்பு ஆகும். ஒற்றையாட்சியில் இருந்தநாடு சமஷ்டியாக மாறியதற்கு உலகில் வேறு உதாரணமே இல்லையென்று மாற்றுக்கட்சியினர் கூறி வந்தனர். ஆனால் மிக அண்மையில் அகில உலகத்தினதும் கவனத்தைக் கவர்ந்த செக்கோஸ்லவேக்கியாவில் நடந்த அரசியல் மாற்றம் இவர்களுக்கு நல்ல பதிலாக அமைந்திருக்கிறது:

### 'செக்' உதாரணம்

கொம்யூனிஸ்ட் கொடுங்கோலிலிருந்து மக்களாட்சி மலரத்தொடங்கிய செக்கோஸ்லவேக்கியாவில் ஸ்லவக் இனத்திற்கும் உரிமை வழங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது: ஒற்றையாட்சியாக இருந்த செக்கோஸ்லவேக்கிய செக் அரசும், ஸ்லவக் அரசும் இணைந்த ஓர் சமஷ்டி அமைப்பாக மாற்றப்பட்டது. அதே போல இலங்கையிலும் உண்மையான ஜனநாயகம் மிளிர வேண்டுமானால் தமிழரசும், சிங்கள அரசும், முஸ்லீம்கள் விரும்பினால் முஸ்லீம் அரசும், கண்டியர் விரும்பினால் கண்டி அரசும் இணைந்த ஓர் இணைப்பாட்சி ஏற்பட்டே தீரவேண்டும்: இப்படிக் கோருவது பிரிவினையென்று அரசியல் நேர்மையாளர் எவரும் கூறமாட்டார்கள்.—தொடரும்

## அட்டகாசம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து சிங்களவர்களைத் தெரிவு செய்து, வடக்கு கிழக்கு மாகாணங்களில் காலியாகவுள்ள காணிகளில் குடியேற்றுவதற்குத் திட்டங்களை அமைத்து அவர்களை குடியமர்த்த வேண்டும்.

★ குறிப்பாக மகாவலிஹட ஓய, மல்வத்து ஓய, மாறுறு, மாகல், லட்டவன ஆகிய இடங்களில் குடியேற்றத் திட்டங்களை ஏற்படுத்தி அங்கும் சிங்களவர்களைக் குடியேற்ற வேண்டும்:

★ நாடற்றவர்கள் காணிகள் வாங்குவது கண்டு பிடிக்கப்பட்டு உடன் தடை செய்யப்பட வேண்டும்.


காணி விற்பனைக்கு

அல்லது குத்தகைக்கு

காங்கேசன்துறையிலிருந்து கால் மைல் தூரத்திலும் தெல்லிப்பழையிலிருந்து ஒன்றே முக்கால் மைல் தூரத்திலும், மைலிட்டியிலிருந்து மூன்றுமைல் தூரத்திலும்காங்கேசன் சீமெந்து தொழிற்சாலைக்கு எதிரிலும் உள்ள 40 பரப்பு காணி விற்பனைக்கு அல்லது குத்தகைக்குண்டு. சினிமா தியேட்டர் அமைப்பதற்கு ஏற்ற அருமையான இடம்.

விண்ணப்பிக்கவும்:

ரி. என். இரத்தினம்,
நகுலகிரி பாம்,
வீமன்காமம்,
தெல்லிப்பழை.


## சிறுபான்மை...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ளப் பெயர்களையுடையவர்கள் தமிழ் - சிங்கள கலப்புடையவர்கள்.

"யாழ்ப்பாணத்தி லுள்ள கோவிய சமூகத்தினர் சிங்களவர்களின் வழித்தோன்றல்கள். அதே போன்று கடற்கரையோரங்களில் வாழும் சிங்களவர்கள் தமிழ் பேசும்இந்தியர்களின் வாரிசுகள். இவர்கள் டீ. சில்வா, டீ. சொய்சா என்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றனர்.

"இலங்கை தி.மு.க.வினில் ஒரு பகுதியினர் தோட்டப் பகுதி மக்களுக்கு (தமிழர்களுக்கு) செளத்தம் போதிக்க ஏற்பாடு செய்வதாகப் பத்திரிகைச் செய்தி கூறுகிறது, இது மகிழ்ச்சிக்குரியது. இதேபோல, சிங்களப் பகுதிகளிலுள்ள தமிழர்களான தோட்டத் தொழிலாளர்கள் சிங்களத்தைப் போதனு மொழியாக ஏற்க வேண்டும்:

"பறங்கியர்கள் தங்கள் தனித்துவத்தை இழந்து சிங்களவர்களாக மாறும்போது தமிழர்களும், முஸ்லிம்களும் ஏன் அதைப் பின்பற்றக் கூடாது? ஆரம்பத்தில் இது அவர்களுக்குக் கஷ்டமாக இருந்தாலும் போகப்போக சரியாகி விடும்."

—இவ்வாறு குறித்த பௌத்த பிக்கு கூறியுள்ளார்.

## சிங்கள ஆட்சியின்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்கவில்லை: இருக்கும் உரிமைகளையும்—அனுபவித்துவரும் சலுகைகளையும்—பறிக்காதே என்றுதான் குரலெழுப்புகிறார்கள்:

புதிய திரைப்படங்கள் திரையிடப்படும்போது, 10,15, பிரதிகள் ஏக காலத்தில் இதுவரை காலமும் திரையிடப்பட்டு வந்தன: யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும், திருமலையிலும் மன்னாரிலும், வவுனியாவிலும் மலைநாட்டிலும் கொழும்பிலும் ஏனையஇடங்களிலும் வாழும் தமிழ் மக்கள் ஏக காலத்தில் தமிழ்ப் படங்களைப் பார்த்து மகிழ முடிந்தது: இந்த உரிமையில் கைவைக்காதே என்று தான் குரலெழுப்புகிறோம்.

இன்று தமிழ்ப்படங்களுக்கு கட்டுப்பாடுவிதிக்க முனைந்திருக்கும் ஆட்சியாளர்கள், சிங்கள வகுப்புவாதிகளின் நெருக்குதலுக்குப் பணிந்து நாளை தமிழ்ப்படங்களுக்கு முற்றாகவே தடை விதிக்கமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

தமிழ்ப்பட வெட்டு தமிழ் பேசும் மக்களுக்கு இழைக்கப்படும் மற்றொரு பெரிய அநீதி. இந்த அநீதியை எதிர்த்து தமிழ்க் கட்சிகள், தமிழர் ஸ்தாபனங்கள், தமிழ்ப் பகுதிகளிலுள்ளஉள்ளாட்சி மன்றங்கள் அனைத்தும் ஒரு சேரக் குரல் கொடுக்க வேண்டுமென்று அறைகூவி அழைக்கிறோம். இது ஒரு கட்சிக்குரிய பிரச்சினையல்ல-கட்சிகளுக்கு அப்பாற்பட்ட பிரச்சினை. தமிழ்ப் பேசும் மக்கள் அனைவரையும் பாதிக்கும் பிரச்சினை. ஆகவே இப்பிரச்சினையில் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு சிங்கள ஆட்சிபீடத்தின் பாசிச போக்கை எதிர்த்து கிளர்ந்தெழுவார்களாக!

## தமிழரசு மாநாடு வெற்றிக்கு...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

காட்சியில் தொகுத்து வைக்கப்பட விருக்கிறது. பத்திரிகைப் பகுதிக்கு குரும்பசிட்டி இரா. கனகரத்தினமும் புததகப் பகுதிக்கு புதுமை லோலனும் அமைப்பாளர்களாக கடமையாற்றி வருகின்றனர்.

### விவசாயக் கண்காட்சி

மாநாட்டின் மற்றோர் முக்கிய அம்சமான விவசாய கைத்தொழில் கண்காட்சியில் காட்சிச்சாலைகளை அமைக்க இதுவரை 60க்கு மேற்பட்ட உற்பத்தியாளர்கள் முன்வந்திருக்கின்றனர். இந்தக் காட்சியை மிகப்பெரிய அளவில் உருவாக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

மேற்படி காட்சியில் இடம்பெறும் ஆகச் சிறந்த கைப்பணிசித்திரம் தையல் விவசாயம் முதலான பொருட்களுக்குப் பரிசில்களும் வழங்கப்படவிருக்கின்றன.

### கலையரங்கு

கலையரங்கில் இதுவரை ஆயிரம் தடவைக்குமேல் மேடையேறிவிட்ட நடிகமணி வி. வி. வைரமுத்து கோஷ்டியாரின் மயான காண்டமும் மற்றும் சில நாடகங்களும் இடம் பெறும்.

அரசியல் பின்னணியுடன் கூடிய 'தமிழன் கதை' என்ற சரித்திர நாடகத்தை தமிழரசு வாலிப முன்னணி தயாரித்து வருகிறது:

திரு. எஸ். ரி. அரசு தயாரிப்பாளர் பொறுப்பை ஏற்றுள்ளார்: அண்ணா கலைக் கோவில் நடன நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து வருகிறது.

### கவி அரங்கு

எங்கள் எதிர்காலம் என்ற தலைப்பில் கவியரங்கு இடம் பெறும். பிரபல கவிஞர்கள் பங்கு பற்ற முன்வந்திருக்கிறார்கள்.

தலைமைப் பேருரை நிகழும் முதல்நாள் மாநாடு அண்ணா அரங்கில் நடைபெறும். தமிழரசுக் கட்சியின் மறைந்த தலைவர்களின் பெயர்களால் ஏனைய அரங்குகள் அழைக்கப்படும்.

### மாபெரும் பந்தல்

மருதனுமடம் சந்தியிலுள்ள உடுவில் கிராமச் சபையின் திறந்தவெளியரங்கில் நடக்கவிருக்கும் இந்த மாநாட்டுக்கென சுமார் 300 அடி நீளமான பந்தல் ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.


கடைசி நாள் நிகழ்ச்சியான பகிரங்க கூட்டம் மட்டும் யாழ். கோட்டை மைதானத்தில் நடைபெறும்.

மாநாட்டில்தொண்டர் படை அணி வகுப்பும் இடம் பெறும். கொடியேற்றத்தின்போது நடக்கவிருக்கும் இந்த படை அணிவகுப்புக்கு [illegible] திரு. என் [illegible] பொறுப்பாளராக இருந்து வருகிறார்.


டேவிட் பிரவுண்

770-36 குதிரை சக்தி 880-46 குதிரை சக்தி

முன்கையிருப்பில் இருந்த டிராக்டர்கள் இப்போது கிடைக்கும்



அத்துடன் உறுதியுடன் உருவாக்கப்பட்ட



3 முதல் 3½ தொன் நிறை கொள்ளும் உயர்த்தக்கூடிய இழுவை வண்டி

தொடர்பு கொள்ளுங்கள்.

ரோலன்ஸ் (ட்ராக்டர்கள்) லிமிட்டெட்

ரோலன்ஸ் லிமிட்டெட் (… கம்பெனி) … ரோட் கொழும்பு 7.

HOUSE OF R ROWLANDS


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நாடற்ற மக்கள் கள்ளத்தோணி என துன்புறுத்தப்படுகின்றனர்

**நாடற்ற மக்களை கள்ளத்தோணிகள் எனப் பொலிசார் கைது செய்து துன்புறுத்துகிறார்கள். இவர்களுக்கு தெரியாத மொழியில் இவர்களது வாக்கு மூலங்கள் பதியப் படுகின்றன. உங்கள் அரசாங்கம் தமிழில் வாக்கு மூலம் பதியத் தக்கவர்களை அனுப்பி விசாரித்தால் இந்தக் கொடுமை நடைபெறுது.'**

**—இவ்வாறு கிளிநொச்சி பா. உ. பண்டிதர் க. பொ. இரத்தினம் பிரதமருக்கு எழுதிய கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.**

இக்கடிதத்தில் திரு. இரத்தினம் மேலும் கூறியிருப்பதாவது:-

இதனுடன் இணைக்கப்பட்டிருக்கும் மு. கந்தையா, ப. முத்துலிங்கம் என்போரின் முறையீட்டைக் கவனித்து இனிமேலும் இவ்வாறு நிகழாமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குக.

இவர்களுடைய முறையிடு அடிப்படை உரிமைகளைப் பற்றியது. தெரியாத மொழியில் எழுதியதற்குக் கை ஒப்பம் இடுமாறு வற்புறுத்தல் நீதியா? நியாயமா? இந்த நாட்டின் சொந்த மொழிகள் இரண்டில் ஒன்றான தமிழைத் தாய் மொழியாகக் கொள்பவர்களை விசாரித்து வாக்குமூலங்களைப் பதியும் பொழுது அவர்களுக்குத் தெரிந்த தாய்மொழியில் பதிதற்குக்கூட உங்கள் அரசாங்கம் ஒழுங்கு செய்யக்கூடாதா! தெரியாத மொழியில் எழுதப்பட்ட வாக்கு மூலத்துக்குக் கையொப்பம் இடுமாறு கேட்டலும் - ஏன் நெருக்குதலும் - நியாயமா? நீதியா?

கையொப்பம் இட மறுக்கலாமே என்று சிலர் இலகுவிற் கேட்கலாம். பொலிசுக்காரர் அதிகாரத்துடன் கேட்கும் பொழுது "கள்ளத்தோணி" எனப் பிடித்து அடைக்கப்பட்டவரை விடுவித்தற்கு வாக்கு மூலம் கொடுக்கும் பொழுது மக்கள் மறுப்பார்களா? உங்கள் அரசாங்கம் தமிழில் வாக்கு மூலம் பதியத்தக்கவர்களை அனுப்பி விசாரித்தால் இந்தக்கொடுமை நடைபெறுது. உங்கள் அரசாங்கம் இந்த நியாயமான கடமையைச் செய்ய இனியாகுதல் வழி வகுக்குமா?

## வாக்கு மூலத்தை தமிழில் பதியாததால் நடைபெறும் பெருங் கொடுமையிது!

அடைக்கப்பட்ட சட்ட விரோதக் குடியேற்றக்காரர் குறிப்பிடும் சாட்சிகளை விசாரித்து அவர்களின் வாக்கு மூலங்களைப் பதியும் பொலிசார் வாக்கு மூலம் கொடுப்போருக்குத் தெரியாத மொழியில் பிழையாக வாக்கு மூலத்தைப் பதிகிறார்கள் என்று சந்தேகம் கொள்ளப் போதிய ஆதாரங்கள் உள.

மாணிக்கம் சின்னப்பன் (பரந்தன் 4ம் வாய்க்கால்) என்பவரின் சாட்சிகளாகிய மு. கந்தையா ப. முத்துலிங்கம் என்போருடைய இந்த முறைப்பாடு இவர்களை விசாரித்த பொலிசுக்காரர் இவர்களுடைய வாக்மூலத்தைச் சாயரிக எழுதவில்லை என்பதை நிறுவுகின்றது. இவர்களுடைய வாக்கு மூலல் சரியாகப் பதியப்பட்டு, குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளருக்கு அனுப்பப்பட்டிருந்தால் அவர் மாணிக்கம் சின்னப்பனை இந்தியாவுக்கு அனுப்ப முடிவு செய்திருக்கமாட்டார். எனவே இவர்களுடையவாக்குமூலம் எவ்வாறுஎழுதப்பட்டதென்பதை உடனே விசாரித்து உண்மை நிலைமையை அறிவிக்குக.

இலங்கையில் 1948ம் ஆண்டு தொடக்கம்தொடர்ந்து நாடற்றவர்களாக வாழ்ந்து வருபவர்களிலே அவ்வாறு வாழ்ந்து வருவதற்குப் போதிய சான்றுகளும் அரிசிப் பங்கீட்டுப் புத்தகமும் உள்ளவர்களையும் முன்னர் பிடித்து விசாரித்து விடுதலை ஆக்கப்பட்டவர்களையும் போதிய விசாரணையின்றித் திடீரெனப் பிடித்துத் தடுப்பு முகாமில் அடைத்துத் துன்புறுத்துவது நீதியாகாது என 26 2-68ல் நான் குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு எழுதியிருந்தேன். உங்களுக்கும் அக்கடிதத்தின் பிரதி அனுப்பியிருந்தேன்.

முன்னர் பொலிசார் பிடித்து விசாரித்துப் போதிய சான்றுகள் இருப்பின் உடனே விடுதலை செய்தும் சான்றுகள் இல்லாவிடின் தடுப்பு முகாமுக்கு அனுப்பியும் வந்தார்கள். ஆனல் இப்பொழுது குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளரின் கட்டளைப்படி பொலிசார் திடீரெனப் பிடித்து எவ்வித விசாரணையும் செய்யாது தடுப்புமுகாமுக்கு அனுப்புகின்றனர்.

எனவே போதிய விசாரணையின் பின்னரே தடுப்பு முகாமுக்கு அனுப்புமாறு பணிப்பதுதான் நீதியும் நியாயமுமாகும்.

சட்டவிரோதக் குடியேற்றக்காரரைப் பிடித்து அடைத்து வெயியேற்றுவது தீவிரமாகச் செய்யவேண்டியதே. ஆனல் இங்கு

## பிரதமருக்கு இரத்தினம் கடிதம்!

தொடர்ந்து வாழத் தகுதியுடைய நாடற்றவர்களைத் துன்புறுத்துவதுநீதியாகாது. எனது தொகுதியில் இருந்து போதிய சான்றுகளும் அரிசிப்பங்கீட்டுப் புத்தகங்களுமுடையவர்கள் போதிய விசாரணையின்றித் தடுப்பு முகாமுக்கு அனுப்பப்பட்டுத் துன்பம் அடைந்துளர்.

நாராயணன் இராமு, மாணிக்கம் சின்னப்பு, சுப்பையா வைரமுத்து, எனும் இவர்கள் போதிய விசாரணையின்றிப் பிடித்தடைக்கப்பட்டார்கள்.


பிடித்து அடைப்பதற்கு முன் விசாரணை செய்து போதிய சான்றுகள் காட்டாதவர்களையே பிடித்து அடைக்குமாறு இதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களைப் பணித்தால் ஏழைக்குடும்பங்கள் பலவற்றைப் பட்டினியிலிருந்தும் காப்பாற்றலாம்.

## வடக்கு கிழக்கு...


(11-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டுபிடித்துகல்வி இலாகா கூறி முடிவில் தமிழ் பிரதேசம் அனைத்திற்கும் ஒரு கலாசாலையே விளங்கவும் கூடும்; இருபுதிய கலாசாலைகள் சிங்களப் பிரதேசத்திலேயே ஏற்படும். எனவே அவற்றிற் கேற்படும் செலவைத் தமிழ் பிரதேசங்களிலுள்ள கலாசாலைகளைக் குறைப்பதால் சமாளித்துவிடலாமல்லவா?

தமிழ் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு விழ இருக்கும் பலத்த அடியை தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்க்க இன்றே, இப்பொ


பல்லும் போனல் சொல்லும் போச்சு
சொற்கள் தெளிவுற நிலையானபற்கள் தேவை




அநேகம் பற்கள் ஈறுவியாதிகளினுலேயே சேதமடைகின்றன என்று பல் வைத்தியர் கூறுவர். ஆரோக்கியமான ஈறுகளில் இருந்தே சிறுவர்களுக்கு உரமான வெண்ணிறப் பற்கள் வளர்கின்றன, என்றும் இளமையுடன் நிலைக்கின்றன. உலகப் புகழ் பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறையில் தயாரான போர்ஹான்ஸ் ஈறுகளைப் பாதுகாக்கும் விசேட மருந்துகள் கொண்டது.

உறுதிமிக்க ஆரோக்கிய ஈறுகளுக்கும்
உரமான வெண்ணிறப் பற்களுக்கும்
என்றும் பாவியுங்கள்

போர்ஹான்ஸ் பற்பசை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடக்கு கிழக்கிலுள்ள

# ஆசிரிய பயிற்சி கலாசாலைகளை

# மூடிவிட சூழ்ச்சி நடக்கிறதா?

**1969ம்** வருடத்திற்காக ஆசிரிய பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டோர் தொகை மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. நாட்டில் ஆசிரியர் பற்றாக்குறை இருந்து வருகின்றது. சுமார் 4000ம் ஆசிரியர்கள் தேவை என்றும் கூறப்படுகின்றது.

அண்மையில் வெளியான செய்தியில், இருக்கும் 23 ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுடன் மேலும் இரு கலாசாலைகள் திறக்கப்பட இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவ ஆசிரியர்களை தொகுதி வாரியாகத் தேர்ந்தெடுப்பதுடன் அவர்கள் நான்கு ஆண்டுகளில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக இருக்கவேண்டும்: இல்லையேல் பதவியிலிருந்து விலக வேண்டுமென்றும் கல்வி இலாகா அறிவித்திருக்கின்றது.

ஆனால் இந்த வருடம் வடமாகாணத்திலுள்ள நல்லூர் கொழும்புத்துறை ஆகியஇரு பயிற்சிக்கலாசாலைகளுக்கும் 22 ஆசிரியர்களையே தெரிந்தெடுத்தனுப்பியுள்ளார்கள்.

இந்த இடத்தில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளின் ஆரம்பநிலையையும் அது படிப்படியாக வளர்ச்சியுற்று இன்று தேய்பிறையாக வருவதையும் நாம் கவனிக்க வேண்டும்.

தமிழ் பிள்ளைகளின் போதனாமொழிப் பிரச்சினை இன்னும் தீர்ந்த பாடில்லை: இன்று வடபகுதி பட்டதாரி ஆசிரியர்களும், அனுபவம் வாய்ந்த பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் வெளிமாகாணங்களுக்கு மாற்றப்பட்டு வருகின்றனர்: இதனால் வடமாகாணத்தில் இன்று ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனரென ஆசிரியசங்கங்கள் குரலெழுப்புகின்றன.

பயிற்சி பெற்று வெளியேறும் அனைவரும் இன்று கண்டி, நுவரெலியா, இரத்தினபுரி மாவட்டத்திற்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர். அத்துடன் பலவருடங்கள் வடமாகாணத்தில் ஆசிரியராக இருந்தோரும் தென்னிலங்கைக்குத்தான் அதிகமாக இடமாற்றலை பெற்றுள்ளனர்.

இவற்றை எல்லாம் கவனிக்கும்போது தமிழ்பிள்ளைகளின் கல்விநிலை குழப்பமடைந்தே காணப்படுகின்றது.

இந்த நிலையில் பயிற்சிக்குத் தெரிவு செய்யும் ஆசிரியர்களிலும் கல்வி இலாகா கைவைத்துள்ளது.

1842 வரை இலங்கையில் ஆசிரியத் தொழிலுக்கு பயிற்சி அளிக்கப்படவில்லை: அக்காலத்தில் குரு குல கல்வி முறையே நடைமுறையில் இருந்தது. 1842ம் வருடம் கொழும்பு அகடமியில் சாதாரண ஆசிரிய வகுப்பொன்று தோன்றியது. அதில் சுமார் 12 பேர் ஆசிரிய பயிற்சி பெற்றனர்: 1845ல் கொழும்பில் புறக்கோட்டைவெஸ்லின் தேவாலயக் கல்லூரியில் 10 ஆசிரியர்கட்குப் பயிற்சியளிக்கப்பட்டது. 1848ல் ஆங்கில மொழிமூலம் சிலர் பயிற்சி பெற்றனர்:

1865ம் வருடம் அரசாங்கம் நியமித்த கல்வி ஆணைக்குழுவின் சிபார்சின்படி ஒழுங்கு படுத்தப்பட்ட பயிற்சிமுறை தோன்றியது: 1903ம் ஆண்டு அரசாங்கம் பல பயிற்சிக் கலாசாலைகளைத் தோற்றுவித்தது.

1959 முதல் 23 ஆசிரிய பயிற்சிக்கலாசாலைகள்இருக்கின்றன. மகரகமையிலும், பலாலியிலும் விசேட பயிற்சியளிக்கும் கலாசாலைகளும் இதில் அடங்கும்.

பாடசாலைகளை அரசாங்கம் கையேற்குமுன் தமிழ் மக்களுக்காகப் பயிற்சியளிப்பதற்கு நல்லூர், கொழும்புத்துறை, கோபாய், திருநெல்வேலி, பலாலி, மட்டக்களப்பு முதலிய இடங்களில் தமிழ் மொழி மூலம் பயிற்சியளிக்கும் கலாசாலைகள் தோன்றின:

அரசாங்கம் கையேற்றதன்பின் பலாலியிலிருந்த தமிழ்மொழி சாதாரண பயிற்சி இல்லாமல் செய்யப்பட்டது. திருநெல்வேலி சைவாசிரியகலாசாலைமுற்று முழுதாக மூடப்பட்டது.

இன்று வடபகுதியில் நல்லூர், கொழும்புத்துறை இரண்டுமே ஆண்களுக்குப் பயிற்சியளித்து வருகின்றன. கோப்பாயில் பெண்களுக்கும், மட்டக்களப்பில் ஆண், பெண் இருபாலாருக்கும் பயிற்சிஅளிக்கப்படுகின்றது: மொத்தம் 4 சாதாரண பயிற்சியளிக்கும் கலாசாலைகள் இன்று இருக்கின்றன.

1961ற்கு முன் ஒவ்வொரு பயிற்சிக்கலாசாலையிலும் 50ற்கு மேற்பட்டோர் வருடாவருடம் தெரிவு செய்யப்பட்டனர். இத்தொகை இன்று படிப்படியாகக் குறைந்து வருவதைத் தமிழ் மக்கள் மிக உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

1967ற்கு முன் 50ற்கு அதிகமானோர்.

1967ல் 40 பேர்.

1968ல் 33 பேர்;

1969ல் 11 பேர்.

கழுதை தேய்ந்து கட்டெறும்பானதென்பதற்குஇதைவிடவேறு உதாரணம்வேண்டியதில்லை.

1970ம் ஆண்டு ஒரு கலாசாலையில் பயிற்சிபெறும்முதலாம், இரண்டாம் வருட ஆசிரியர் தொகை 22 ஆகிவிடும். அப்படியானால் 22 பேருக்கு ஒரு கலாசாலையா? என்று கேள்விகல்வி இலாகாவால் கேட்கப்படும்! 22 பேருக்காக பல விரிவுரையாளர்களைவைத்திருப்பதும் வீணான செலவாகும். 1970ம் ஆண்டு இரு பயிற்சிக் கலாசாலைகளையும் ஒன்றுஇணைக்கும் யோசனை செயல்படும்: இது மிக இலகுவாக நடந்தேறி விடும். சைவாசிரிய கலாசாலை மூடியதுபோல் இன்னொரு கலாசாலைக்கும் மூடுவிழா அடுத்தடுத்த ஆண்டுகளில் ஏற்பட்டே தீரும்.

பயிற்றப்படாத ஆசிரியர்கள் பயிற்சி குறைக்கப்பட்டு—இதற்கு பல சாட்டுக்களைக்

(10-ப் பக்கம் பார்க்க)

## எங்கே நீயோ நானும் அங்கே உன்னோடு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"அது உனக்குத்தானப்பா... உன்னைப் போன்ற உத்தமனுழியனுக்கு மாதம் முன்னூறு ருபா கொடுத்தாலும் போதாதப்பா. ஆனால் உன்னைப் பேராசைக் காரனாக்க நான் விரும்பவில்லை. இதற்கு முன் வேலைக்கு வந்தவர்கள் எல்லாம் சம்பளத்திற்காகக் கூட வேலை செய்ய வில்லையப்பா! அவர்கள் நோக்கம் எல்லாம் சம்பளத்தைப் பெற்றுக் கொள்வதில்தான் இருந்தது: எனது ஆயுள் காலத்தில் சம்பளத்தைப் பற்றி அக்கறைப் படாமல் தன் வேலையே கண்ணும் கருத்துமென்று நினைத்து உழைத்த முதல் நபர் நீதான் அப்பா. உன்னைஎனக்கு மிகவும் பிடித்து விட்டது ராமு. ஆமாம்! உனக்குக் கலியாணம் ஆகிவிட்டதா...? என்று கேட்டு விட்டுஅவனைச் சந்தேகத்துடன் பார்த்தார்.

அவர் எதற்காக இப்படியொரு குதர்க்கமான வினாவைக் கேட்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டே "இல்லை ஸார்" என்றான் ரகு. அப்படியா? ரொம்ப நல்ல தாய்ப் போச்சு...இனிமேல் நீ என்னுடனேயே தங்கிக் கொள்ளலாம், ஓய்வு நேரங்களில் உனக்கு நான் டிறைவிங் பழக்கப் போகிறேன் ராமு. அதன் பின் உனக்குக் கவலையே இருக்காது. என் குடும்பத்திற்கு நீ ஒரு சிறந்த பணியாளராக இருப்பாய்! என்றவர் முடித்ததும்.... "ஸார்... என்னை மன்னிக்க வேண்டும்... நீங்க நினைச்சிருப் போல இல்லை... எனக்குத் திருமணமாகிய ஒரு தங்கச்சி உண்டு. அவள் கர்ப்பிணி ஸார். அவள் கணவன் கோபித்துக் கொண்டு அவளைத் தனியாகத் தவிக்க விட்டுப் போனதில் இருந்து நான் தான் அதுக்கு எல்லாமா இருக்கிறன். இந்த நிலையில் நான் தனியாக எப்படி ஸார் உங்களுடன் இருக்கமுடியும் என்று கூறிய போது சகோதர பாசம் அவன் குரலில் மிளிர்ந்தது.

"ஓ அப்படியா ... பரவாயில்லை தம்பி. அதுதான் உன் முக்கிய கடமையாக இருக்க வேண்டும். உன்னைச் சகோதரனாகப் பெற்ற உன் தங்கை ரொம்பப் பாக்கியசாலியாக இருக்க வேண்டும். இந்தக் காலத்துப் பசங்களில் யார் தம்பி உன்னைப் போல இவ்வளவு கரிசனையாகச் சகோதரங்களைக் கவனிக்கப் போகிறார்கள்... கடவுள் உன்னை ஆசீர்வதிப்பார் தம்பி. உன் தங்கையின் பிரசவம் பற்றி நீ சிறிதும் கவலைப்படக் கூடாது. எல்லாம் என் ஆஸ்பத்திரியில் இலவசமாக நடக்கும்..." என்று கூறிவிட்டு அவர் உள்ளே சென்றபோது அவனுக்கு இப்படியான தெய்வப் பிறவிகள்கூட உலகத்தில் இருக்கிறார்களா என்று நினைக்கத் தோற்றியது. வல்வையில் இருந்து புறப்பட்ட பின் தன் வாழ்க்கையில் இப்படியான தெய்வப் பிறவிகளைச் சந்திக்கப் போகிறோம் என்பது முன்கூட்டியே தெரிந்திருந்தால் நிச்சயமாக அன்று அவன் தற்கொலை செய்ய எத்தனித்திருக்கவே மாட்டான்.

நாட்கள் விரைவாக நகர்ந்து கொண்டேயிருந்தன. பவானிக்கும் வயிற்றுக் குழந்தை ஆறுமாத வளர்ச்சியைப் பூர்த்தியாக்கிவிட்டிருந்தது. இன்னும் நான்கு மாதங்களில் குழந்தை பிறந்து விடும், பிரசவம் பற்றி அவன் கவலைப்படவில்லை. காரணம் டாக்டர் ராஜன் இருக்கும்வரை அவனைக் கைவிட மாட்டார் என்ற நம்பிக்கை அவனுக்கு நிறைய இருந்தது. ஆனால் பிள்ளைப் பதிவு வைத்தாக வேண்டுமே. தகப்பன் பெயர் தெரியாத குழந்தையாக பவானி பெறப்போகும் குழந்தை இருக்கக் கூடாது என்பது அவன் கருத்து. எப்படியும் பவானியிடம் இருந்து அவள் காதலன் பெயரையறிந்து அந்தப் பெயரையே பதிவு செய்துவிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான்.

அவனது அடுத்த பிரச்சனை வீடு மாறும் பிரச்சனையாக இருந்தது. வெள்ளவத்தையில் அறுபது ருபாவுக்கு ஒரு அறை பார்த்து விட்டான். ஆனால் [illegible] வீட [illegible] காட்டி உள்ளன்புடன் பழகும் புனிதத்தையும் அவள் கணவனையும் விட்டுப் பிரிய அவனுக்கு மனம் வேதனைப் பட்டது. என்ன சாட்டுச் சொல்லி அவளை வேறு வீட்டுக்கு அழைத்துப்போகலாம் என்று மூளையைக் குழப்பிக் கொண்டிருந்தபோது டாக்டர் கூறிய செய்தி அவன் நாக்கில் தேன் வார்த்தது போல் இனித்தது. டாக்டருக்குவேண்டிய ஒரு பிரபல வர்த்தகரின் குழந்தைகளை மேற்பார்வை செய்ய படித்த பெண்ணொருத்தி தேவை என்றும் டாக்டர் அந்த இடத்திற்கு ரகுவின் சகோதரியைச் சிபார்சு செய்திருப்பதாகவும் ரகு விரும்பினால் அடுத்த நாளே அந்த உத்தியோகத்தைப் பெற்றுத்தர முடியும் என்றும் அவர் கூறியிருந்தார்.

பவானி இதை விரும்புவாளோ என்று பயந்த ரகுவுக்கு அவள் அளித்த பதில் மிகவும் சாதகமாக இருந்தது. உத்தியோகம் பார்ப்பதில் அவனைவிட அவளே அதிகம் கரிசனை காட்டினாள்: அந்த நிலையில் வீட்டுப் பிரச்சினை சுலபமாகத் தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கை பிறந்தது அவனுக்கு.- புனிதத்திடம் ஒருபடியாக தான் வீடுபார்த்திருப்பதை எடுத்துக்கூறி விடையும் பெற்றுவிட்டான். ஒன்றுபட்ட இதயங்கள் பிரிய வேதனைப் பட்டபோதும் பிரிந்துதான் ஆகவேண்டும் என்ற கட்டாயத்தின் பேரில் நீர் மல்கும் கண்களுடன் பிரிந்தனர். ரகுவும் பவானியும் புதிய இருப்பிடத்திற்குச் சென்று நான்கு நாட்கள் முடிந்து விட்டன.

பவானி உத்தியோகம் ஏற்றுக் கொண்ட பின் காலையில் ஏழு மணிக்குப் போய் மாலை ஐந்து மணிக்கு வருவாள். அவளுக்கு அந்த வேலை ரொம்பவும் பிடித்துக்கொண்டது. இரண்டு குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பது, அவர்கள் விளையாட்டு, உணவு முதலியவற்றை மேற்பார்வை செய்தல், ஓய்வு நேரங்களில் அவர்களுக்கு அறிவு வளர்க்கும் கதை [illegible] அளவான வேலை; அவளைவிட அந்த வீட்டில் சமையலுக்கு இரண்டு பேர். பிள்ளைகளைக் கவனிக்க ஒரு ஆயா: பூந்தோட்டம் பார்க்க, ஒரு ஆள்: ட்றைவர் இப்படித் தொட்டதற்கெல்லாம் ஏவல் செய்ய அங்கு ஒரு தொழிலாளவர்க்கம் நிறைந்திருந்தது: பணத்தில் புரளும் குடும்பமாக இருந்தது அவர்கள் வாழ்ந்தவிதம்:


பவானியைப் பொறுத்தவரை ஒரு குறையும் இருக்கவில்லை. மூன்று நேர உணவுடன் மாதம் எழுபத்தைந்து ருபா சம்பளமும் கிடைத்ததால் அவர்கள் வாழ்க்கை திருப்திகரமாக அமைந்திருந்தது: அந்த வகையில் இருவரும் கடவுளுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருந்தனர்: ரகுவும் காலை ஐந்து மணிக்கு எழுந்து போனால் மாலை ஆறு மணியளவிற்தான் வீடு திரும்புவான். சிலவேளைகளில் பவானியும் அவனும் இடையில் சந்தித்து ஒன்றாகவே வீடு திரும்புவார்கள். பகல் முழுவதும் இருவரும் வெளியே செல்வதால் போயா தினங்கள் தவிர ஏனைய நாட்களில் அவர்கள் அறை அநேகமாகப் பூட்டப்பட்டேயிருக்கும். அந்த வீட்டுக்காரருக்கு அது எவ்வளவோ ஒத்தாசையாக இருந்தது:

ரகுவுக்கு வேண்டிய போதெல்லாம் உதவ டாக்டர் இருந்ததால் அவனுக்கு இப்போது எந்தக் கவலையும் தோற்றவில்லை: இடையிடையே சின்னையாவைப் பற்றிய எண்ணம் வரும் போது அவன் மனம் குழம்பத்தான் செய்யும். இருந்தும் அவன் அதையும் ஒரு பழக்கமாக்கிக்கொண்டுவிட்டதால் கவலை அவ்வளவு தெரிவதில்லை. பவானியின் பிரசவத்திற்காகப் பணம் சேர்ப்பதே தற்போதைய அவன் குறிக்கோளாக இருந்தது. கடந்த இரண்டு மாதங்களில் அவன் மிச்சம் பிடித்துச் சேர்த்த பணத்தை எண்ணிப்பார்த்த போது அவன் முகம் மலர்ந்தது. ஆமாம்! அவனிடம் இருநூறு ருபா பணம் சேர்ந்திருந்தது.

—வளரும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பொழுது அமோக வெற்றியுடன் காட்சியளிக்கின்றது!!



சென்ட்ரல் — ராஜேஸ்வரா
(மருதானை) (மட்டுநகர்)



* ஏ. வி எம் ராஜன்
* அஞ்சலிதேவி * வசந்தி
* டி. எஸ். பாலையா,
* வி. எஸ். ராகவன்
* வி. கே. ராமசாமி
* ஜீ. சகுந்தலா
* நிர்மலா

மற்றும் பலர் நடித்த

ஜனாதிபதி பரிசு பெற்ற
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்

# என்னதான் முடிவு?

கதை—வசனம்—டைரக்ஷன்:— கே. எஸ். கோபாலகிருஷ்ணன்.

---

சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில்
விரைவில் திரையிடப்பட விருக்கிறது



ரவிச்சந்திரன்,
பாரதி,
சந்திரபாபு
அசோகன்
பாலையா
நடித்த

# வாலிப விருந்து

---

9-வது வாரம்
செல்லமகால்
(கொழும்பு)
எம். ஜி. ஆர். நடிக்கும்

## குடியிருந்த கோயில்
(ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)


5-வது வாரம்
கெயிட்டி
(கொழும்பு)
நாகேஷ், முத்துராமன் நடிக்கும்

## அனுபவி ராஜா அனுபவி

---

7-வது ஜனத்திரள் வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) விஜயா (மட்டுநகர்) வெலிங்டன் (யாழ்நகர்)



# ஊட்டிவரை உறவு

(பாஸ்கள் சலுகைகள் ரத்து)

---

2-வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) மைலன் (கொழும்பு)
மோடேன் (பண்டாரவளை) ஸ்ரீகிருஷ்ண (திருமலை) விஜிதா (அட்டன்)

பானுமதி, நாகேஷ், முத்துராமன், ரங்கராவ்
மற்றும் பலர் நடித்த

## பூவும் பொட்டும்

---

விரைவில் எதிர்பாருங்கள்

★ ரவிச்சந்திரன் * காஞ்சனா
—நடித்த

# அதே கண்கள்

(ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் [illegible] கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194 ஏ. இலக்கத்தில்
1969-வருடம் மார்ச் மாதம் 26-ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது. தொலைபேசி:23411